வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 30.04.2022 சனிக்கிழமை | இதழ் : 145 | பக்கங்கள் : 16




மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# இடைக்கால அரசுக்கு தயார்; மஹிந்தவை நீக்கவும் உறுதி!

## ஜனாதிபதி இணங்கினார் என்கிறார் மைத்திரி!



கொழும்பு, ஏப். 30

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவியிலிருந்து நீக்கி, புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவை தலைமையில் அனைத்துக் கட்சிகளும் அடங்கிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணங்கியுள்ளார் என்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சி

15

## திங்கட்கிழமை பொது விடுமுறை

கொழும்பு, ஏப். 30

நாளை மறுதினம் (02.05.2022) திங்கட்கிழமை விசேட பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மே தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதனால் எதிர்வரும் திங்கட்கிழமை விசேட பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பிரதமருக்கு ஆதரவாக 117 எம்.பிக்கள்: சர்வகட்சி சந்திப்பு இரத்து!

### ஜனாதிபதி அதிரடி முடிவு

கொழும்பு, ஏப். 30

நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவிருந்த சர்வகட்சி சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் கலந்துரையாடும் கூட்டத்தில் பங்கேற்குமாறு பாராளுமன்றத்தில் சுயேச்சையாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் ஜனாதிபதி சமீபத்தில் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் பிரதமருடனான சந்திப்பின்போது ஆளுங்கட்சி

15

# ஜனாதிபதி செயலகம் அருகே இரகசியமாக படைகள் குவிப்பு

## காலிமுகத்திடல் போராட்டத்தில் அமைதியின்மை ஏற்படுத்த சதி?

சிங்கள ஊடகம் பரபரப்பு தகவல்



**கொழும்பு, ஏப்ரல் 30**

**காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகம் அருகே 750இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இரகசியமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர் - என்று தெரிய வருகின்றதென பிரபல சிங்கள இணையத்தளம் ஒன்று நேற்று வெளியிட்டது.**

அந்த செய்தியின் தகவல்களின் படி,

ஜனாதிபதி செயலகத்துக்கு அருகிலுள்ள 6 மாடிக் கட்டடத்தில் ஒரு வாரமாக ஏராளமான இராணுவத்தினர் இரகசியமாக அழைத்துவரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காலி, மாத்தறை, மத்துகமை மற்றும் பெலவத்தை பகுதிகளின் இராணுவ முகாம்களில் இருந்தே இந்த இராணுவத்தினர் அழைத்து வரப்பட்டனர். இந்த இரகசிய இடத்தில் மட்டும், 12ஆவது சிங்க படையணியின் 250 சிப்பாய்கள் தங்கவைக்கப்

15

## சுமந்திரன், சாணக்கியன் பங்கேற்ற கல்முனை ஆர்ப்பாட்டத்தில் குழப்பம்!

கல்முனை, ஏப். 30

கல்முனையில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் பங்கேற்ற ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று பிசுபிசுத்துப்போனது.

கல்முனை பிரச்னையை தமிழ் - முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணைந்து தீர்வு காணவேண்டும் என்று பேரணியில் பங்கேற்றோர் வலியுறுத்தினர். அத்துடன், முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும்

15

## அண்ணனின் ஆட்சியில் நீதி இல்லை; தம்பியிடமும் எதிர்பார்க்க முடியாது!

### கருணாகரம் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப். 30

“அண்ணனின் ஆட்சியிலும் நீதி இல்லை, தம்பியின் ஆட்சியிலும் நீதியை எதிர்பார்க்க முடியாது. நீதி இல்லாத நாட்டில் தற்போது நிதியும் இல்லை. ஆனால், இல்லாத நீதிக்கும், நிதிக்கும் ஓர் அமைச்சர் மட்டும் இருக்கின்றார்”, என்று கூறியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனா என்று அறியப்பட்ட கோவிந்தன் கருணாகரம்.

தராகி என்று

15

## ஜனாதிபதிக்கு எதிராக பிரேரணை; தமிழ்க் கூட்டமைப்பினுடையதல்ல!

### பங்காளிக் கட்சியான புளொட் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

ஜனாதிபதிக்கு எதிராக சுமந்திரன் கொண்டுவரும் நம்பிக்கையில்லா பிரேரணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடையதல்ல. அது அவரின் தனிப்பட்ட பிரேரணையே என்று அந்தக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் த. சித்தார்த்தன் எம். பி. தெரிவித்துள்ளார்.

சுமந்திரன் எம். பியின் பிரேரணை தொடர்பாக ‘ஈழநாடு’ அவரைத் தொடர்பு கொண்டு

15

## ஐ.எம்.எவ்வுடன் இரு மாதத்தில் உடன்படிக்கை!

கொழும்பு, ஏப். 30

சர்வதேச நாணய நிதியத்துடன் (ஐ. எம். எவ்.) இரண்டு மாதங்களுக்குள் உடன்படிக்கைக்கு வர முடியும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

15

## அடிப்படை உரிமை மீறல் மனு; ஜனாதிபதிக்கு எதிராக தாக்கல்!

கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை எதிர் மனுதாரராக இணைத்து அந்த நாட்டின் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இரசாயன உரப் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டமையால் விவசாயிகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன எனத் தெரிவித்தே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

15

## இடைக்கால அரசுக்காக என்னை மிரட்டுகின்றனர்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஏப். 30

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவளிக்கத் தவறினால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழக்க நேரிடும் எனவும் தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாட்டில் நடக்கும் எதிர்ப்பு பேரணி நேற்று நான்காவது நாளை எட்டியுள்ளது.

15

## இரு தினங்களுக்கு மின் தடை இல்லை!

கொழும்பு, ஏப். 30

நாளை ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் மின்சார தடை நாடு முழுவதும் இருக்காது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமையும், புனித ரமழான் தினமான எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமையுமே மின்சார துண்டிப்புக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

15

## தலைப்பிறை நாளை தீர்மானிக்கப்படும்!

கொழும்பு, ஏப். 30

ஹிஜ்ரி 1443 புனித ஷவ்வால் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் கூடவுள்ளது.

இந்த மாநாட்டில் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், இஸ்லாம்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

அது யுத்த காலம். யாழ்ப்பாணத்தில் சமூகங்களிடையேயான ஏற்றத்தாழ்வுகள் ஓரளவேனும் குறைந்திருந்ததாகக் கூறப்படுவதுண்டு.

அதற்கு பல காரணங்கள் இருந்தன. ஆனால், இது குறித்து ஒரு பொதுவெளியில் பேசிய இந்த ஊர்க்குருவி, ‘இந்த ஏற்றத்தாழ்வு யாழ்ப்பாணத்து சமூகங்களிடையே இல்லாமல் போய்விட்டது என்று சொல்கிறார்கள். ஆனால், அது போய்விடவில்லை. தங்களை உயர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டிருக்கின்றவர்கள், இப்போது ஆயுதங்களுக்குப் பயந்து, அதனை பழுதுபடாமல் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்திருக்கிறார்கள். ஆயுதங்கள் ஓய்ந்த பின்னர் அதனை வெளியே எடுப்பார்கள்’ என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், அதனை கேட்டுக்கொண்டிருந்த, ஒரு பிரகிருதி, ஊர்க்குருவி அதனை குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருக்கிறாராம் என்று எழுதி, சர்ச்சையைக் கிழப்பியது இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

தெற்கில் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு போகுமாறு கோரி இன-மத-மொழி வேறுபாடுகளைக் கடந்து போராட்டம் நடப்பதாகவும், இலங்கையில் இப்போது சிங்களவர்கள் மத்தியில் இன பாகுபாடு இல்லாமல் போய்விட்டதாகவும் சிலர் தொடர்ச்சியாக கூறிக்கொண்டிருப்பதை கேட்கின்றபோதுதான் இந்த பழைய சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது.

கொழும்பில் எழுபத்தியேழிலும் எண்பத்தி மூன்றிலும் தமிழர்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டபோது - இனக்கலவரம் தாண்டவமாடியபோது, ஆங்காங்கே சில சிங்களவர்கள் தத்தமது சக்திக்கு உட்பட்டு, தமக்குத் தெரிந்த தமிழர்களை பாதுகாத்தது பலருக்கும் தெரிந்திருக்கும்.

அவ்வாறு பாதுகாத்தவர்களும் சிங்களவர்கள் என்பதால், சிங்களவர்கள் மத்தியில் இனவாதம் இருக்கவில்லை என்று அர்த்தமல்ல. அதன் அளவீடு மிகச்சிறியது என்பதால் அதனை கவனத்தில் கொள்வதே தவறான முன்னுதாரணமாகிவிடும்.

அதுபோலவே, இன்று காலிமுகத்திடலில் போராட்டம் நடாத்துகின்றவர்களும். அவர்களும் இனக்கலவரங்களில் தமிழர்களை பாதுகாத்த ஒருசில சிங்களவர்களின் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். அதற்காக, சிங்களவர்கள் மத்தியில் ஒட்டுமொத்தமாக இனவாதம் இல்லாமல் போய்விட்டது என்பது சுத்த அபத்தமானது.

இன்றுள்ள நெருக்கடியில் அதனையும் கையில் எடுத்தால், நாடு தாங்காது என்பதால் அதனை குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்திருக்கிறார்கள், பழுதடையாமல் பாதுகாப்பதற்காக.

இன்றைய நெருக்கடிநிலை தளர்ந்த பின்னர், பயன்படுத்துவதற்காக மீண்டும் எடுப்பார்கள் என்பதை சிறுபான்மையினர் மறந்துவிடலாகாது.

‘இனவாதம் இல்லாமல் போய்விட்டது என்று ஒருசிலர் கூறுகின்றார்கள். அவ்வாறெனில், சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கலந்துகொள்ளச் சொல்லுங்கள்’ என்று நமது ரெலோ தலைவர் அறைகூவல் விடுக்கின்றார். நாங்கள் காலிமுகத்திடல் வரவேண்டும் என்றால், நீங்கள் முள்ளிவாய்க்கால் வாருங்கள் என்கிறார்.

இன்று ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி எதனால் ஏற்பட்டது? கடன்வாங்கி கடன்வாங்கி முப்பது வருடங்களாக யுத்தத்தை நடாத்தி. அந்த யுத்தத்தின் வெற்றியை முதலீடாக வைத்தே ராஜபக்ஷக்கள் அரசியலில் நிலைக்கிறார்கள். அதனை மூலதனமாக்கியே, ஊழல் நடக்கின்றது.

இந்த நாட்டில் புரையோடிப்போன இனப்பிரச்னைக்கு தீர்வுகாணப்பட்டிருந்தால், புலம்பெயர்ந்த தமிழர்கள் - அதாவது, இனப்பிரச்னையினால் புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்த நாட்டை தமது தாய்நாடாக நினைத்திருப்பார்கள். அவர்கள் அவ்வாறு நினைத்திருந்தால், இன்று இந்த நாடு இவ்வளவு நெருக்கடியில் தத்தளிக்கவேண்டி ஏற்பட்டிருக்காதே என்று எத்தனை சிங்களவர்கள் சிந்திக்கின்றார்கள்?

சிங்கள மக்களை விடுவோம், சிங்களத் தலைவர்கள் எத்தனை பேர் இந்த யதார்த்தத்தை உணர்ந்திருக்கின்றார்கள்?

முஸ்லிம்களுக்கு எதிராகவும், தமிழர்களுக்கு எதிராகவும் இனவாதம் பேசிக்கொண்டு, சிங்கள பௌத்த அடையாளத்தை மட்டுமே முன்நிறுத்தி ஆட்சிக்கு வந்த இன்றைய அரசுக்கு கடைசியில் முண்டுகொடுக்க ஓர் அலிசப்ரியும் குமாரசாமியும்தான் கடைசியில் கிடைத்தார்கள்.

இந்த யதார்த்தத்தை இனியாவது ஒவ்வொரு சிங்களவர்களும் புரிந்துகொண்டால் மட்டுமே இந்த நாடு சரியான பாதையில் பயணிக்கமுடியும்!

- ஊர்க்குருவி

# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 30

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் தொடர் பாடல் ஆங்கிலம் மற்றும் கணனி அடிப்படைக் கல்விக்கான குறுகிய கால கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதுக்கு மேற்பட்ட க.பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்த யாவரும் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் மே 7ஆம் திகதி வரை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியுமென அந்த நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# கும்பாபிஷேகம்

தென்மராட்சி, ஏப். 30

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான புனருத்தாரண நவ குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை காலை 8.05 மணிமுதல் 10.35 மணிவரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை பிரதம குரு “கிரியா ரத்தினா” “சிவஸ்ரீ” ராம் சண்முகானந்தக் குருக்கள், ஆலய பிரதம குரு “சர்வபோதகம் பண்டிதர்” கலாநிதி து. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ ஜெகதீஷ மயூரக்குருக்கள், சிவஸ்ரீ சோ. பிரசன்னாக்குருக்கள் ஆகியோர் நடத்தி வைப்பர்.

மகா கும்பாபிஷேக வாழ்த்துரையை சிவஸ்ரீ குமாரசுவாமி நாதக்குருக்களும் அருளாசியை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ து.ஷ .இரத்தினசபாபதிக் குருக்களும் வழங்குவர். (ஐ)

# ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 30

தீம்புனல் வார பத்திரிகையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள சூரிய மஹாலல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஏ. ரவிவர்மா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மூத்த ஊடகவியலாளர் ந. வித்தியாதரன் பிரதம விருந்தினராகவும் ஊடகவியலாளர் அ.நிக்சன், ஜீவநதி ஆசிரியர் க. பரணீதரன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வேல். நந்தகுமார் சிறப்பு விருந்தினர்களாகவும் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

# பிரதமர் பதவி விலகாவிடின் மக்கள் பார்த்துக்கொள்வர்!

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 30

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகாவிட்டால் மக்கள் வீதிக்கு இறங்கி ஏனையவற்றை பார்த்துக்கொள்வார்கள் - இவ்வாறு தெரிவித்துள்ளார் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இடைக்கால அரசாங்கத்தின் வியூகம் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற பேச்சில் கலந்துகொள்வதற்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், “குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவது அவசியமானது. சகல கட்சிகளையும் ஒன்றிணைத்தே இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கிறோம். மாற்று வழிமுறை ஊடாக அரசாங்கத்தில் ஒன்றிணையும் நோக்கம் எமக்கு கிடையாது.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து அனைத்து கட்சி தலைவர்களும் அவதானம் செலுத்தி பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாட்டு மக்கள் வீதிக்கிறங்கியுள்ளார்கள். போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் எதிர்க்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு பாராளுமன்றம் ஊடாக மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ஐ)

# மாக்சிய லெனினிச கட்சி மே தின கொண்டாட்டம்!

வவுனியா, ஏப். 30

“உழைக்கும் மக்களே ஒன்று சேருங்கள். நடைமுறையில் உள்ள நாசகார பொருளாதார கட்டமைப்பை வீழ்த்தி, உழைக்கும் மக்கள் அதிகாரத்தை நோக்கி புரட்சிகர மே தினத்தில் அணிதிரள்வோம்”, என்ற கோஷத்தை முதன்மைப்படுத்தி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தின முன்னெடுப்பு ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

மே முதலாம் நாளான அன்று, பி.ப. 2.30 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் இருந்து மே தினப் பேரணி ஆரம்பமாக உள்ளதுடன், பொதுக்கூட்டம் பிற்பகல் 4 மணியளவில் பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

கட்சியின் வட பிராந்திய செயலாளரும் வலி. கிழக்குப் பிரதேச சபையில் அங்கத்துவம் வகிக்கும் சுயேச்சைக் குழுவின் தலைவருமான தோழர் கா. செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இப் பொதுக்கூட்டத்தில் சிறப்புரைகளைக் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் சி. கா.செந்திவேல் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

# கோட்டா அரசாங்கத்துடன் எந்த ஒப்பந்தமும் இல்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி மறுப்பு

கொழும்பு, ஏப். 30

அரசாங்கத்துடன் இணைந்த எந்தக் கட்சிகளுடனும் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்பதை ஐக்கிய மக்கள் சக்தி உறுதிப்படுத்தியது.

இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ,

“ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இடைக்கால அரசாங்கத்தில் இணையவுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸவின் அறிக்கையை மறுத்துள்ளார்.

முழு நாட்டினாலும் நிராகரிக்கப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முட்டுக் கொடுப்பதற்காக செயற்படும் எந்தவொரு திட்டத்துக்கும் அல்லது எந்தவொரு குழுவுக்கும் எதிர்க்கட்சி எதிரானது எனவும் அவர் கூறினார்.

இந்த நாட்டில் உள்ள 21 மில்லியன் மக்களுடன் தவிர ஐக்கிய மக்கள் சக்தி எந்த ஒப்பந்தங்களையும் செய்யவில்லை என்று பிரேமதாஸ கூறினார்.

ஊழல் மற்றும் திருட்டைத் தடுக்க நிரந்தர மற்றும் சக்தி வாய்ந்த நிறுவனம் அமைக்கப் படும், அது சுதந்திரமாக செயல்படும் என்று சஜித் பிரேமதாஸ மேலும் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu
30.04.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஈழத் தமிழர் பிரச்னைக்கான தீர்வு?

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஆபத்தில் உதவும் நாடாக இந்தியா இருக்கின்றது. முன்னரும் அப்படித்தான் இருந்திருக்கின்றது. இதில், ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. குறிப்பாக, மோடி தலைமையிலான இந்தியா –'முதலில் அயலவர்கள்' – என்னும் அயலுறவுக் கொள்கை நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால், இந்தியாவின் உதவிகள் ஆச்சரியமானவையல்ல. ஆனால், வரலாற்று ரீதியாக சிங்கள தலைமைகள் இந்தியாவுக்கு விசுவாசமான நிலைப்பாடுகளை கொண்டிருந்ததில்லை. காதலும், விரோதமும் என்னும் அடிப்படையில்தான் சிங்கள ஆளும் வர்க்கத்துக்கும், புதுடில்லிக்கும் இடையிலான உறவு இருந்து வந்திருக்கின்றது.

சிங்கள ஆட்சியாளர் அணிசாரா கொள்கை அல்லது நடுநிலை என்னும் அடிப்படையில் இந்தியாவுடன் முழுமையாக நிற்பதைத் தவிர்க்கும் வகையிலேயே செயல்பட்டு வந்திருக்கின்றனர். ஆபத்தில் இந்தியாவின் உதவியை நாடினாலும்கூட, இந்தியாவா மற்றவர்களா என்னும் நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய அரசியல் நிலைமகள் ஏற்படுகின்ற சூழலில், சிங்கள ஆளும் வர்க்கம் எப்போதுமே 'கழுவும் மீனில் நழுவும் மீனாகவே' இருந்திருக்கின்றது. இந்த விடயங்களை புதுடில்லி கண்டுகொள்ளாமல் செயல்படுகின்றது – தனது உண்மையான நண்பர்களை இனம் கண்டுகொள்ளத் தவறுகின்றது – என்னும் பார்வை தமிழ்த் தேசிய கருத்தியலாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

இந்த நெருக்கடியான காலத்திலும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான, 13ஆவது திருத்தச்சட்டத்தை, இந்திய சதி மூலம் அமுல்படுத்தும் சூழ்ச்சிகள் இடம்பெறலாமென்னும் குரல்களையும் கேட்கமுடிகின்றது. ஆனால், இதே சிங்கள – பௌத்த சக்திகள் – இந்தியாவிடமிருந்து பொருளாதார உதவிகளை பெறுகின்றபோது, அதற்கு எதிராக பேசுவதில்லை. ஆனால், இந்தியாவுடன் பொருளாதார உடன்பாடுகளை மேற்கொள்ள முற்படுகின்றபோது, அதற்கெதிராக வீதிக்கு வருவதற்கு தயங்குவதுமில்லை. கிழக்கு கொள்கலன் முனைய விடயத்தில், சிங்கள தொழில்சங்கங்கள் வீதியில் இறங்கின – அதனைக் காரணம் காண்பித்து, அரசாங்கம் செய்து கொண்ட உடன்பாட்டை இரத்துச் செய்தது. ஆனாலும் இந்தியா பொறுமையாக மேற்கு முனையத்திற்காகக் காத்திருந்தது.

இந்தியாவின் இதுபோன்ற மென் அணுகுமுறைகளை, சிங்கள ஆளும் வர்க்கம் இந்தியாவின் இயலாமையாகவே, நோக்குகின்றது. என்னதான் இருந்தாலும், தங்களை ஒரு கட்டத்திற்கு மேல் பகைத்துக் கொள்வதற்கு புதுடில்லி ஒருபோதும் விரும்பாது ஏனெனில், தங்களிடம் பாகிஸ்தான் மற்றும் சீனா என்னும் துருப்புச் சீட்டுக்கள் இருக்கின்றன. அந்த துருப்புச் சீட்டுக்களை தாங்கள் பயன்படுத்த முயற்சித்தால், இந்தியா வேறு வழியின்றி தங்களை நோக்கி இறங்கி வரத்தான் வேண்டிவருமென்றே கொழும்பு கருதுகின்றது. இந்தப் பார்வை பாரபட்சமில்லாமல் அனைத்து சிங்கள கட்சிகளிடமும் இருக்கின்றது. இந்தியாவின் தவிர்க்க முடியாத இடத்தை, அவர்கள் புரிந்து கொண்டாலும்கூட, தங்களிடமிருக்கும் துருப்புச் சீட்டுக்களில் நம்பிக்கையுடையவர்களாகவும் இருக்கின்றனர்.

ஆனால், சிங்கள ஆளும் வர்க்கத்தின் துருப்புச் சீட்டு உபாயங்களுக்கு எப்போதும் பலியிடப்படுவர்களாக, ஈழத் தமிழர்களே இருக்கின்றனர். இறுதியில், ஈழத் தமிழரின் நலன்களே எப்போதும் சிங்கள கால்களால், பந்தாடப்படுகின்றது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய இந்தியாவோ, அமைதியாக இருக்கின்றது. இவ்வாறான மனக்குறைகள் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

இதனை தமிழ்த் தேசிய கட்சிகள் புரிந்து கொண்டிருக்கின்றனவா – என்பதுதான் இங்குள்ள கேள்வியாகும். ஆறு கட்சிகள் இணைந்து, இந்திய பிரதமருக்கு கடிதமொன்றை எழுதியிருந்தன. கடிதத்தை அனுப்புவதில் ஆர்வம் காட்டிய – அதற்காக மல்லுக்கட்டிய எவரும் இப்போது அதுபற்றிப் பேசுவதாகத் தெரியவில்லை.

இந்திய பிரதமரிடமிருந்து அல்லது, இந்திய வெளிவிவகார அமைச்சிடமிருந்து குறித்த கடிதத்துக்குக் கிடைத்த பதில் என்ன? பதிலைப் பெறும் முயற்சியில் குறித்த கட்சிகள் கரிசனை காண்பித்தனவா? குறிப்பாக, கடிதம் எழுதும் விடயத்தில் மல்லுக்கட்டிய ரெலோ, இது தொடர்பில் இப்போது வாய்திறப்பதில்லை. ஏன்? பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா சில உதவிகளை வழங்கியிருக்கின்றது. ஆனால், தமிழர் சார்பில் – இந்தியா பேசிவரும் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில், புதுடில்லி எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது? இது தொடர்பில் தமிழ் கட்சிகள் புதுடில்லியை நோக்கி மேற்கொண்ட முயற்சிகள் என்ன? பொதுவாகவே, இலங்கைத் தீவு நெருக்கடிக்குள் விழுகின்றபோது, ஈழத் தமிழரின் பிரச்னை ஓரத்திற்கு சென்றுவிடுவதுண்டு. இப்போதும் அதுதான் நடக்கின்றது. இந்திய பிரதமருக்கு கடிதம் – இந்தியாவின் தலையீட்டை கோருதல் – இப்படியெல்லாம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும், ராஜபக்ஷக்களின் வங்குரோத்து அரசியலுக்கு முன்னால் காணாமல் போய்விட்டது. அந்த வகையில் நோக்கினால், வீழ்ந்தும், ராஜபக்ஷக்கள் தமிழர் பிரச்னையை பலவீனப்படுத்துகின்றனர்.

# 'சிவப்பு எச்சரிக்கை'

**அலசுவது இராஜதந்திரி**

ஆட்சியாளர்களுக்கு எதிரான காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம், நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் படிப்படியாக பரவ ஆரம்பித்துள்ளது. கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி வருகின்ற அரசுக்கு எதிரான பேரணி மே தினமன்று கொழும்பை வந்தடையவுள் ளது.




மே தினத்தின்போது அரசியல் கட்சிகளின் பேரணிகள் நாடளாவிய ரீதியில் இடம்பெறு வதும் அப்போது பலதரப்பட்ட கோஷங்கள் எழுப்பப்படுவதும் வழமையான நிகழ்வுகள். ஆயினும், இந்தத் தடவை அனைத்து கட்சிகளினதும் கோஷங்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அவர்கள் சார்ந்தோருக்கு எதிராக மே தினத்துக்கு ஓரிரு தினங்கள் இருக்கும் தறு வாயிலேயே வெளிவந்து கொண்டிருப்பதை காணமுடிகின்றது.

இந்தத் தடவை சகல ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியிலிருந்தும் ஒரே குரலில் ஒலிக்கின்ற கோஷம் கோட்டா கோ என்பதாகவே இருக்கின்றது. இவ்வாறு காலிமுகத்திடல் முதல் நாடளாவிய ஆர்ப்பாட்டங்களிலிருந்து ஜனாதிபதி, பிரதமருக்கு எதிராக கோஷங்கள் வெளிவந்துள்ளமையை மக்கள் விடுத்துள்ள 'சிவப்பு எச்சரிக்கை' என்று முன்னாள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரி வித்துள்ளார்.

காலிமுகத்திடலில் 'கோட்டா கோ கம' என்ற கற்பனைக் கிராமமொன்றையும் அமைத்து இடம்பெற்று வருகின்ற ஆர்ப்பாட்டம் அரசுக்கு எதிரான மக்களின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

வெயில், மழை, குளிர்ந்த கடல் காற்று என்பவற்றையும் பொருட்படுத்தாது காலிமுகத்திடலில் 'கோட்டா கோ கம' போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இது போன்ற நீண்ட தொடர்ச்சியான அரசுக்கெதிரான போராட்டம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒருபோதும் இடம்பெற்றிருக்கவில்லை என்றே அறிய முடிகின்றது.

அதேசமயம், மற்றுமொரு முக்கிய விடயமென்னவெனில் தென்னிலங்கையில் இடம்பெற்றுவருகின்ற ஆர்ப்பாட்டங்களில் கடந்த காலங்களில் போலன்றி இத்தடவை இளைய தலைமுறையினர் முன்னிற்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த சஜித் பிரேமதாஸ, அக்கட்சியின் மகளிர் அணி தலைவியான ஹிருணிகா பிரேமசந்திர போன்ற இன்றைய சந்ததி இளம் தலைவர்கள் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்துக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களுடன் பல இளைஞர், யுவதிகளும் கைகோத்து நிற்கின்றனர்.

அதேபோல, காலிமுகத்திடல் சத்தியாக்கிரக ஆர்ப்பாட்டத்தின் பின்னணியிலும் இளைஞர்களே முன்னிற்பதையும் மிகப் பொறுப்புணர்வோடு தம்மால் முடிந்தவரை ஆர்ப்பாட்டக்காரர்களின் தேவைகளை அவர்கள் கவனித்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

அரசியல் அவதானிகளின் நோக்கில் தற்போதைய ஆர்ப்பாட்டம் ஒரு புதிய சிந்தனையோடு கூடிய இளம் சந்ததியினரின் வெளிப்பாடாக இருக்கின்றது. இதன் காரணமாக ஆர்ப்பாட்டங்களின்போது வன்முறைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதில் பெரிதும் கவனம் செலுத்தப்படுகின்றது. அத்துடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் இருக்கும் இடங்கள்கூட அடிக்கடி சுத்தம் செய்யப்படு கின்றது.


உறுதியாகவும் அதேசமயம் நேர்த்தியாகவும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற ஆர்ப்பாட்டம் எவ்விதத்திலும் தடம்புரண்டு ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதான கோரிக்கையான ஆட்சியாளர்கள் பதவி விலகவேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்படாதுவிட்டால் மிக மோசமான விளைவுகளையே எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை சுட்டிக்காட்டியே 'சிவப்பு எச்சரிக்கை'யாக தற்போதைய காலிமுகத்திடல் போராட்டத்தை முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன எச்சரித்துள்ளார். இந்த எச்சரிக்கை அனைத்து விதத்திலும் ஒரு காலமறிந்த எச்சரிக்கையாகவே இருக்கின்றது.

'சிவப்பு எச்சரிக்கை' என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன குறிப்பிட்டுள்ளமையை நோக்கும்போது தற்போதைய காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது ஆர்ப்பாட்டங்களுக்கும் ஓர் எல்லை உண்டு என்ற அடுத்தகட்ட நிலைக்கே நிச்சயம் பிரவேசிப்பார்கள். அப்போது ஆட்சியாளர்களும் தமது நிலையை பலப்படுத்த முன்வரமுடியும். அப்போது வன்முறைகள் இரு தரப்பிலிருந்தும் இயல்பாகவே தோன்ற முடியும். அத்துடன், தற்போதைய இக்கட்டான பொருளாதார சூழல் மேலும் மோசமடையக் கூடிய தன்மைகளும் வலுப்பெறும்.

இத்தகையதோர் அபாயகரமான நிலையைக் கவனத்திலெடுத்தே டாக்டர் ராஜித சேனாரட்ன 'சிவப்பு எச்சரிக்கை' பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஒரு சதுரங்க ஆட்டத்தில் பெருந்தலைகள் சுற்றிவளைக்கப்பட்டது போன்ற நிலையில் ஆட்சியாளர்கள் சரணாகதியுடன் கூடிய பதவி விலகலை மேற்கொள்வதைவிட வேறெதனையும் செய்ய முடியாத நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர். •

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏப்ரல் - 30 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 17
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : அமாவாசை




**மேடம்**
தந்தையால் எதிர்பாராத நன்மை உண்டு. செலவு கூடும். புதிய முயற்சியை சிலநாள் தள்ளி வைக்க வேண்டியிருக்கும். உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை என்ற குறை நீங்கும்.

**இடபம்**
இன்று மலைப்போல் வந்த பிரச்னை பனி போல் நீங்கி விடும். எடுத்த முயற்சி அனைத்தும் நன்மையும், லாபமும் தரும். உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த பிரச்னை தீரும்.

**மிதுனம்**
தவறு செய்து பிரச்னையில் மாட்டிக்கொள்ள வேண்டாம். சுய பரிதாபம் வேண்டாம். நண்பர் உங்களால் உயர்வார். எந்த முயற்சியானாலும் தாமதமான பலன்களே கிடைக்கும்.

**கடகம்**
அக்கம் பக்கத்தைச் சேர்ந்தவரால் நன்மை உண்டாகும். தந்தைக்கு தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். கவலை ஒன்று முடிவுக்கு வரும். பிறருக்கு நன்மை செய்வீர்கள்.

**சிம்மம்**
தவறான சிந்தனையின் காரணமாக வீண் பிரச்னையில் மாட்டாதீர்கள். தொழில், வியாபாரத்தில் கவனத்துடன் செயல்படுவீர்கள். குடும்பத்திற்கு நன்மை தரக்கூடிய செலவுகளை செய்வீர்கள்.

**கன்னி**
உங்களுக்கு வழிகாட்டியாக இருப்பவர் உதவி செய்வார். சிரமப்பட்டு உழைத்தால் உடனடி பலன் இருக்கும். உங்களை அதிகாரி பாராட்டுவர். நிதி நிலை சீராகும்.

**துலாம்**
உங்களின் நேர்மைக்கு பலன் உண்டு. வேலைப் பளு குறையும். அதிர்ஷ்டத்தை நம்பி மனஅழுத்தம் அடைய வேண்டாம். உழைப்பு குறைந்தாலும் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

**விருட்சிகம்**
முன்பு உழைத்த உழைப்பிற்கு இன்று பலன் கிடைக்கும். வீடு வாங்குவது பற்றிய கவலை நீங்கும். நட்பு வட்டம் விரியும். பெற்றோர் பெருமிதம் அடைவார்கள். உங்களுக்கு புகழ் கிடைக்கும்.

**தனுசு**
உழைப்பின் மூலம் பெரிய பலன்களை எதிர்பார்க்க வேண்டாம். உங்களால் பலன் அடைந்தவர்கள் நன்றி பாராட்டுவர். உடல் சோர்வு ஏற்படாமல் கவனமாக இருங்கள்.

**மகரம்**
இன்று யாரிடமும் வீண் விவாதம் செய்ய வேண்டாம். சகோதரரால் உங்களுக்குச் சிறு நன்மை ஏற்படும். சகோதரருடன் இருந்த பிரச்னை இன்று முடிவுக்கு வரும்.

**கும்பம்**
எதிர்பாராத பண வரவால் குடும்பத்தின் கஷ்டம் விலகும். புண்ணியச் செயலுக்காக குடும்பத்தினர் ஒன்றாக இணைவீர்கள். குலதெய்வ வழிபாட்டு முயற்சி வெற்றிகரமாய் முடியும்.

**மீனம்**
கடந்த நாட்களில் குடும்பத்தில் இருந்து வந்த வருத்தம் நீங்கும். நண்பர்களிடம் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி ஒற்றுமை வரும். மற்றவருக்கு உதவுவீர்கள். உங்களின் ஆலோசனைக்கு வரவேற்பு கிடைக்கும்.

# இலங்கைக்கு உதவுவதற்கு சட்டபேரவையில் தீர்மானம்!

*128 கோடி இந்திய ரூபாய் உதவிகளும் அறிவிப்பு*

*சென்னை, ஏப். 30*

இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு மத்திய அரசிடம் அனுமதிகோரி தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தமிழ்நாடு சட்டபேரவையில் முன்வைத்த தனிநபர் பிரேரணை அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.



இந்தத் பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய முதலமைச்சர் ஸ்டாலின் தமிழக அரசு இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்க முன்வந்துள்ளதாக தெரிவித்தார்.

அதற்கமைய, 80 கோடி இந்திய ரூபாய் பெறுமதியான 40,000 மெற்றிக் தொன் அரிசி, 137 மருந்து பொருட்கள் (28 கோடி இந்திய ரூபாய்) மற்றும் குழந்தைகளுக்காக 500 தொன் பால்மா 15 கோடி இந்திய ரூபாய்) என்பவற்றை வழங்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது. இவற்றை மத்திய அரசின் அனுமதியுடன் நேரடியாக இலங்கையிலுள்ள தூதரகம் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மக்களுக்கு உதவி செய்வதற்காக தனது சொந்த நிதியிலிருந்து 50 இலட்சம் இந்திய ரூபாயை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளாரென தமிழக எதிர்க் கட்சியின் துணைத்தலைவர் ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனது தீர்மானத்துக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த முதல்வர் ஸ்டாலின் தற்போது, தாம் வழங்க முன்வந்திருப்பது முதல்கட்ட உதவி என்றும், தேவையேற்படின், அடுத்தகட்டமாக உதவுவதற்கும் தமிழ்நாடு அரசு தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

(ஐ)

# இலங்கை நெருக்கடியை அயல்நாட்டு பிரச்னையாக மட்டும் பார்க்கமுடியாது!

*தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின்*

*சென்னை, ஏப். 30*

இலங்கைப் பொருளாதார நெருக்கடியை அயல் நாட்டுப் பிரச்னையாகப் பார்க்கமுடியாது. அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு - இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவ தமிழக சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தனி தீர்மானத்தை கொண்டுவந்தார். அப்போது உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “இலங்கையில் உணவு, அத்தியாவசியப் பொருள்கள், உயிர்காக்கும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளில் கடும் உரத்தட்டுப்பாடு நிலவுகிறது. இலங்கைப் பொருளாதார நெருக்கடியை அயல் நாட்டுப் பிரச்னையாகப் பார்க்கமுடியாது. அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு.

இலங்கை மக்களுக்கு உதவ பிரதமர் மோடியிடம் நேரடியாகவும் கோரிக்கை வைத்திருக்கிறேன். அனுமதி அளிப்பது தொடர்பாக இதுவரை எந்த பதிலும் வரவில்லை. தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, இலங்கை மக்களுக்கு உதவ மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்” - என்றார்.

(ஐ)

# பக்தர்கள் பக்திபரசவத்தில் ஆழ தேரில் எழுந்தருளினார் ஸ்ரீரங்கன்!

*ஸ்ரீரங்கம், ஏப். 30*

உலகப் பிரசித்தி பெற்ற தமிழ்நாடு - திருச்சி - ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் நேற்று சித்திரை தேர்த் திருவிழா பக்தர்களின் ரங்கா ரங்கா பக்திப் பரவசத்துடன் வெகு விமரிசையுடன் கோலாகலமாக நடைபெற்றது.



108 வைணவத் தலங்களில் முதன்மையானதும், பூலோக வைகுண்டம் என்றும் அழைக்கப்படும் ஸ்ரீங்கம் ரங்கநாதர் கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் ‘விருப்பன் திருநாள்’ என்றழைக்கப்படும் சித்திரை திருவிழா 10 நாட்கள் நடைபெறும்.

இதன்படி, நிகழாண்டுக்கான சித்திரை திருவிழா கடந்த 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. நேற்றைய தினம் தேர்த் திருவிழா நடைபெற்றது. உற்சவர் நம்பெருமாள் அதிகாலை 4.45 மணிக்கு கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு, அதிகாலை 5.15 மணிக்கு சித்திரைத் தேர் ஆஸ்தான மண்டபம் வந்து சேர்ந்தார். இதன்பிறகு, நம்பெருமாள் காலை 6.15 மணிக்கு மேஷ லக்னத்தில் தேரில் எழுந்தருளினார்.

நம்பெருமாளுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்ற பிறகு காலை 6.30 மணிக்கு திருத்தேர் வடம்பிடித்து இழுக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிந்தா - கோவிந்தா என்றும், ரங்கா - ரங்கா என்றும் பக்தி பரவசத்துடன் முழக்கம் எழுப்பியவாறு வடம் பிடித்து தேரை இழுத்தனர்.

கீழ சித்திரை வீதியிலிருந்து புறப்பட்டு, தெற்கு சித்திரை வீதி, மேற்கு சித்திரை வீதி, வடக்கு சித்திரை வீதி ஆகியவற்றில் வலம் வந்து, மீண்டும் காலை 10.30 மணிக்கு தேர் நிலையை அடைந்தது. (ஐ)



## இராயப்பு யோசப் ஆண்டகையின் கனவு இன்று நிறைவேறியுள்ளது

### மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர்

மன்னார், ஏப். 30

மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகையின் நீண்ட நாள் கனவு இன்று நிறைவேறி உள்ளது என மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் தெரிவித்தார்.

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் மிசேரியோ நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட 20 வீடுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மதியம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மிசறியோ நிறுவனத்தின் இலங்கைக்கான திட்ட பணிப்பாளர் கெசுமா சாடட், இலங்கைக்கான பரிந்துரை இணைப்பாளர், இலங்கை செடெக் நிறுவனத்தின் தேசிய இயக்குநர் அருட்தந்தை மகேந்திரா குணதிலக்க,வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை அன்ரன் அடிகளார், மன்னார் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்தந்தை விக்டர் சோசை அடிகளார் மற்றும் முசலி பிரதேசச் செயலாளர் ரஜீவ் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த வீடுகளை வைபவ ரீதியாக கையளித்தனர்.

இதன்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முள்ளிக்குளம் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 20 வீடுகளை திறந்து வைத்துள்ளோம். விசேட விதமாக மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகையின் அயராத முயற்சியின் காரணமாகவே இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இராயப்பு யோசேப்பு ஆண்டகை பல வருடங்களுக்கு முன் கண்ட கனவு இன்று நிறைவேறி இருக்கிறது.

முள்ளிக்குளம் கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற அனைத்து மக்களும் மீண்டும் தமது இடங்களுக்கு வரவேண்டும். அந்த மக்களை எப்படியாவது தமது சொந்த இடங்களுக்கு கொண்டு வர வேண்டும் என்று ஆயர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

அதன் விளைவாக மிசறியோ நிறுவனத்தின் நிதி உதவியுடன் முள்ளிக்குளம் கிராமத்தில் 20 வீடுகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த வீடுகளை கட்டி முடிக்க உதவி செய்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்-என்றார். (அ)

# அரசுக்கு பெரும்பான்மை இல்லை 4 ஆம் திகதி நிரூபிப்போம்!

### ராஜித சேனாரத்ன கூறுகிறார்



**கொழும்பு, ஏப். 30**

**“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு பெரும்பான்மை பலம் இல்லை என்பதை எதிர்வரும் 04 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிரூபிப்போம்.” - என்று பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன அறிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான அரசும் பதவி விலக வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கை. எனவே, ஜனாதிபதி பதவி விலகாமல் அமையும் சர்வக்கட்சி அரசியல் நாம் அங்கம் வகிக்கமாட்டோம் .

இந்த அரசுக்கு பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை பலம் இல்லை. இதனை 4 ஆம் திகதி நிரூபிப் போம். மக்களுடன்தான் நாம் இருக்கின்றோம். அவர்களின் கோரிக்கைக்கு புறம்பாக முடிவுகள் எடுக்கப்படமாட்டா-என்றார். (அ)

## திரிபோஷ உற்பத்தி மூன்று மாதங்கள் நிறுத்தம்

கொழும்பு, ஏப். 30

நாடளாவிய ரீதியில் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தினால் திரிபோஷ விநியோகம் செய்யப்படுவதில்லையென குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் திரிபோஷா இன்மையால் சிறுவர்கள் போசாக்கின்மைக்கு உள்ளாகும் வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முதல் சில மாதங்களில் மட்டுமே தமக்கு திரிபோஷ கிடைத்ததாக அப்பகுதி கர்ப்பிணித் தாய்மார்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து லங்கா திரிபோஷ நிறுவனத்திடம் வினவியபோது, மூலப் பொருட்கள் பற்றாக்குறையால் திரிபோஷ உற்பத்தி மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## பெரமுன எம்.பிக்கள் குழுக் கூட்டத்தில் இடைக்கால அரசு குறித்து வாக்குவாதம்

கொழும்பு, ஏப். 30

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில், கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு - கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் பங்கேற் றனர்.

தற்போது நிலவும், எரிபொருள், சமையல் எரிவாயு நெருக்கடி உட்பட பொருளாதார பிரச்னைகள் குறித்து இதன்போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் விடயம் தொடர்பில் கருத்து முன்வைக்கப்பட்டபோது, இந்தக் கூட்டத்தில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதாகவும் தெரியவந்தது. (அ)

## நாணய நிதிய வேலைத்திட்டம் குறித்து இரு மாதங்களில் ஆரம்ப உடன்படிக்கை

### மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை



கொழும்பு, ஏப். 30

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பணியாளர் மட்ட அல்லது ஆரம்ப கட்ட உடன்படிக்கையை எட்ட முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் உரையாற்றியபோது அவர் இதனை தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துக்கான அடிப்படை, அதாவது பணியாளர் மட்ட உடன்படிக்கையை எட்டுவதற்கு முன்னர், அத்தியாவசியமென கருதப்படும் நடவடிக்கைகளை இலங்கை பூர்த்தி செய்ய வேண்டும்.

அதன்பின்னரே, இலங்கையினால் இடைநிறுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன் மீள செலுத்தல் செயற்பாடுகளை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க முடியும் என்று அவர் கூறினார். (அ)

## யாழில் அச்சுறுத்திப் பணம், கைபேசிகள் அபகரித்த கும்பலை சேர்ந்த 2 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம் மாநகரில் வெவ்வேறு நான்கு சம்பவங்களில் இளைஞர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் அலைபேசிகளை அபகரித்த கும்பலைச் சேர்ந்த இருவர் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இளைஞர் ஒருவரிடம் 6 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் அலைபேசியை அபகரித்துச் சென்ற நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகரில் கடந்த ஒரு வாரத்துக்குள் 3 வெவ்வேறு சம்பவங்களில் இளைஞர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் அலைபேசிகள் அபகரிக்கப்பட்டன.

நூதனமான முறையில் இளைஞர்களை மறித்து தமது சகோதரியுடன் கதைப்பதாகவும் அவருடைய படத்தை பணப்பையில் (பேஸில்) வைத்திருப்பதாகவும் அச்சுறுத்தி விட்டு அவர்களிடமிருந்து அலைபேசி மற்றும் பணத்தை அபகரித்து கும்பல் தப்பித்து வந்துள்ளது.

இந்த நிலையில் 4ஆவது சம்பவமாக யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் இளைஞர் ஒருவரை அதே பாணியில் அச்சுறுத்தி 6 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் பெறுமதியான அலைபேசியை இருவர் அபகரித்துச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞனால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 மற்றும் 24 வயதுடைய இருவரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 6 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் இரண்டு அலைபேசிகள் கைப்பற்றப்பட்டன.

(அ)

## அருகில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்ற ஆசிரியர்கள் விடுத்த கோரிக்கைக்கு இணக்கம்

கொழும்பு, ஏப். 30

எரிபொருள் செலவுகள் மற்றும் தற்போதைய நிலைமைக்கு மத்தியில், அருகிலுள்ள பாடசாலையில் கடமையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு, ஆசிரியர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இணக்கம் தெரிவித்துள்ளார்.

எனினும், இவ்வாறானதொரு தீர்மானத்தை உடனடியாக அமுலாக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பு கிடைக்குமாயின், தரவுகளை மதிப்பாய்வு செய்து, இந்த நடவடிக்கையை முன்னெடுக்க முடியும் என கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா கூறினார்.

(அ)

# ராஜபக்ஷக்கள் பதவி விலகாவிடின் மே 6 முதல் தொடர்ந்து போராட்டம்

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 30

**"ராஜபக்ஷக்களும் இந்த அரசும் உடன் பதவி விலக வேண்டும். அவ்வாறு இல்லா விட்டால், எதிர்வரும் 6 ஆம் திகதி வீதிக்கு இறங்கி, கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு, ராஜபக்ஷக்களை விரட்டும்வரை போராட்டம் தொடரும்."**




-இவ்வாறு தொழிற்சங்க கூட்டமைப்புகளின் பிரதிநிதியும், ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினருமான வசந்த சமரசிங்க, தொழிற்சங்கங்களின் சார்பில், அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான அரசும் உடனடியாக பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி நாடு தழுவிய ரீதியில் நேற்று முன்தினம் பணி புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசதுறை, அரசசார்பற்ற தனியார் துறை, பெருந்தோட்டத்துறை, வெகுஜன அமைப்புகள் உள்ளிட்ட பல துறைகள் கூட்டாக இணைந்தே இதற்கான நடவடிக்கையில் இறங்கின.

அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள், மின்சார சபை தொழிற்சங்கங்கள், சுகாதார தொழிற்சங்கங்கள், துறைமுக ஊழியர்சார் தொழிற்சங்கங்கள், தபால் துறைசார் தொழிற்சங்கங்கள், பொருளாதார மத்திய நிலையங்களில் உள்ள தொழிற்சங்கங்கள், வங்கிசார் தொழிற்சங்கங்கள் உட்பட மேலும் பல தொழிற்சங்கங்கள், பணி புறக்கணிப்பு போராட்டத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தின.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை வெற்றியளித்தது என்று தொழிற்சங்க பிரமுகர்கள் தெரிவித்தனர்.

"ராஜபக்ஷ குடும்பமும், இந்த கள்ள அமைச்சரவையும் பதவி விலக வேண்டும். மக்கள் தமக்கு தேவையான ஆட்சியை முன்னெடுக்க இடமளிக்க வேண்டும். இல்லையேல் பதவியில் இருந்து விரட்டும் நடவடிக்கை 6 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும். ஆட்சியாளர்களை ஏழு கடல்களை தாண்டிச்சென்றாலும் விடமாட்டோம், கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீள நாட்டுக்கு கொண்டுவருவோம்." - என்று வசந்த வசந்த சமரசிங்க குறிப்பிட்டார். (அ)

# கோட்டா கோ கமவில் ஐ.தே.கவின் மே தினம்!

கொழும்பு, ஏப். 30

ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை காலிமுகத்திடலில் போராட்டக்காரர்களுடன் ஒன்றிணைந்து சர்வதேச தொழிலாளர் தினத்தை அனுஷ்டிக்க உள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கட்சியை கட்டி எழுப்ப வேண்டிய நேரம் இதுவல்ல என்றும் பொதுமக்களின் போராட்டத்தை சுற்றி மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்றும் ரங்கே பண்டார கூறினார்.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்கள் மே தினத்தன்று காலிமுகத்திடலில் போராட்டக்காரர்களுடன் ஒன்றிணைந்து மே தினத்தை அனுஷ்டிப்பார்கள் எனவும் குறிப்பிட்டார்.

"கோட்டாகோகம" இளைஞர் போராட்டம் அரசியல் கட்சிக்கு சம்பந்தப்பட்டதல்ல என்பதால் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் இதில் கலந்துகொள்ளமாட்டார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# தனமல்வில சந்தை வளாகத்தில் நபரொருவர் வெட்டிக் கொலை!

கொழும்பு, ஏப். 30

தனமல்வில வாரச் சந்தை வளாகத்தில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வார சந்தைக்கு பொருட்களை கொள்வனவு செய்ய வந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்ட நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவர் கித்துல்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டது.

சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத அதேவேளை, மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# வினாத்தாள் அச்சிட காகிதாதி ஒரு பிரச்னையாக அமையாது

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

கொழும்பு, ஏப். 30

2021ஆம் கல்வி ஆண்டுக்கான, கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதற்கு, காகித பற்றாக்குறை பிரச்சினையாக அமையாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டீ. தர்மசேன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் கூறினார்.

2021ஆம் கல்வி ஆண்டுக்கான, சாதாரண தரப் பரீட்சை, எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், மே மாதம் 20ஆம் மற்றும் 21ஆம் திகதியளவில், தொடர்புபடுத்தல் மத்திய நிலையங்களுக்கு வினாத்தாள்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)



# கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் 355 ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 30

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்றது.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 355 ஆசிரியர்களுக்கான நியமனங்களை வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். சமன் பந்துலசேன வழங்கினார்.

இந்த நிகழ்வில் பல்வேறு பாடவிதானங்களைக் கொண்ட ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன.

விவசாயம், கலை விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலம் மற்றும் சமயம் உள்ளிட்ட 18 வகையான பாடவிதானங்களை கற்பிக்கும் 355 டிப்ளோமா ஆசிரியர் பயிலுநர்கள் நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் மற்றும் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)





# போராட்டக்காரர்கள்-பொலிஸார் அலரிமாளிகைக்கு முன் முறுகல்!

கொழும்பு, ஏப். 30

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகைக்கு முன்பாக நேற்றுக் காலை பதற்ற நிலை ஏற்பட்டது. அங்கு தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மைனா கோ கம என்று பெயரிடப்பட்டுள்ள இந்த இடத்தில், பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள், பொது மக்கள் என பலர் கலந்துகொண்டு பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், போராட்டக்காரர்களின் கோஷங்களை முடக்கும் வகையில், அலரிமாளிகையில் ஒலிபெருக்கி ஊடாக மிகவும் சத்தமாக பிரித் ஓதப்பட்டு இடையூறு விளைவிக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது.

அதேநேரம், இங்குள்ள போராட்டக்கார்களுக்கு எதிராக, குறித்த பகுதியின் நடைப்பாதைகளில் பொலிஸார் பஸ்கள் உள்ளிட்ட பொலிஸ் வாகனங்களையும் நிறுத்தியுள்ளனர்.

இவ்வாறான சூழலில் நேற்று காலை குறித்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை அகற்றுவதற்கு கொள்ளுபிட்டி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

கொள்ளுபிட்டி பொலிஸ் நிலையத்துக்கு கடந்த இரு தினங்களுக்கு முன்னர் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர், குறித்த பகுதியில் நிறுதிவைக்கப்பட்டுள்ள வாகனங்களை அப்புறுப்படுத்துமாறு கோரியிருந்தனர்.

எனினும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களின் உரிமையாளர்கள் யார் என்பது தெரியாததால் அதனை அப்புறப்படுத்த முடியாது என பொலிஸார் தெரிவித்திருந்தனர் என போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்தநிலையிலேயே நேற்று குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் வாகனங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்தபோது, வாகனங்களின் உரிமையாளர்கள் குறித்த தகவல்களை பகிரங்கப்படுத்துமாறு போராட்டக்காரர்கள் கோரியுள்ளனர்.

இதன்காரணமாக பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதன்போது, குறித்த பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட தன் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் நபர் அம்புலன்ஸின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டதாக பிக்கு ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

# ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு; 4 பொலிஸ் அதிகாரிகள் கைது!

கொழும்பு, ஏப். 30

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கேகாலை பிராந்தியத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. பி.கீர்த்திரத்ன குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

ரம்புக்கனையில் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப் பாட்டத்தின்போது, துப்பாக் கிப் பிரயோகம் மேற்கொள்ள அனுமதி வழங்கியமைக்காக இவர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், இந்த துப்பாக்கி பிரயோகம் தொடர்பில் மேலும் 3 பொலிஸ் கான்ஸ்ட பிள்கள் கைது செய்யப்பட்டுள் ளனர்.

போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட் டில் ஒருவர் உயிரிழந்துள்ளது டன், 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்பது

# ஆளுங்கட்சிக்கு '113' இல்லையேல் நான் புதிய பிரதமரை நியமிப்பேன்

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30

மஹிந்த ராஜபக்சவை பிர தமர் பதவியிலிருந்து விலகுமாறு நான் வலியுறுத்தவில்லை. பாரா ளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்குமானால் அப்பதவியில் அவர் நீடிப்பதில் எனக்கு எவ் வித பிரச்னையும் இல்லை. அவ் வாறு இல்லாவிட்டால் பெரும் பான்மையை நிரூபிக்கும் தரப் புக்கு ஆட்சியை ஒப்படைக்க வேண்டிய நிலை எனக்கு ஏற் படும். இது அரசமைப்பிலுள்ள ஏற்பாடு. அதற்கு கட்டுப்பட் டாக வேண்டும் என ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா பொதுஜன பெர முனவின் பாராளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி தலைமை யில் நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் ஆரம்பத் தில் நாட்டில் தற்போது ஏற்பட் டுள்ள நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அத்தியா வசிய பொருட்களுக்கு ஏற்பட் டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு உடனடியாக நட வடிக்கை எடுக்கப்படவேண் டும், பொருட்களின் விலை யேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என மொட்டு கட்சி எம்.பிக்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விரு காரணங்களே, மக் கள் மத்தியில் அரச எதிர்ப்பு அலை கோலோச்ச பிரதான காரணங்களாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன்பின்னர் இடைக்கால அரசு தொடர்பில் கலந்துரை யாடப்பட்டுள்ளது. இது சம்பந் தமான யோசனையை இரா ஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ முன்வைத்து, அது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த யோசனைக்கு இரா ஜாங்க அமைச்சர் சனத் நிஷ ாந்த, பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி ஆகி யோர் எதிர்ப்பை வெளியிட் டுள்ளனர்.

சிறீலங்கா பொதுஜன பெர முன ஆட்சிக்கே மக்கள் ஆணை வழங்கினர். இடைக்கால அரசு அமைக்க அல்ல." என திஸ்ஸ குட்டியாராச்சி கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையில் பிரதமர் பதவி விவகாரமும் கூட்டத்தில் சூடுபிடித்துள்ளது.

"ஆளுங்கட்சிக்குள் இருந்துகொண்டே டலஸ் அழ கப்பெரும சூழ்ச்சி செய்கின்றார். பதவியை பெறுவதாக இருந் தால் நேர்வழியில் அதனை செய்ய வேண்டும். 113 இருந்தால் அதனை பெற்றுக்கொள்ளலாம்." என டலஸ் மீது சரமாரியாக விமர்சனக் கணைகளை குட்டி யாராச்சி தொடுத்துள்ளார்.

இதனால் டலஸ் அழகப் பெரும கோபமடைந்தார்.

"சந்திரிகா காலத்தில், மஹிந் தவை உயர் இடத்துக்கு கொண்டு வருவதற்கு நான்தான் போராடி னேன். அப்போது ஐக்கிய தேசி யக்கட்சி பக்கம் இருந்தவர்க ளும், அரசியலில் இல்லாதவர்க ளும்தான், 'சூழ்ச்சி' பற்றி கதைக்கின்றனர். நான் எதையும் வெளிப்படையாக பேசுபவன் - செய்பவன். புதிய அரசு அமைய வேண்டும் என்ற முடி விலேயே இன்றும் இருக்கின் றேன். " - என பதிலளித்துள்ளார்.

டலஸின் கருத்துக்கு ஆளுங் கட்சியின் பின்வரிசை எம்.பிக் கள் சிலர் இடையூறு ஏற்படுத்த முற்பட்டவேளை, குறுக்கீடு செய்த பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ,

"டலஸ் அழகப்பெருமவை எனக்கு நன்கு தெரியும். நான் தான் அவரை அரசியலுக்கு கொண்டு வந்தேன். அவர் வெளிப்படையானவர். முது கில் குத்தும் நபர் அல்லர்." என்று டலசுக்காக குரல் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து பின்வரிசை எம்.பிக்கள் அடங்கினர்.

அதன் பின்னர் பவித்ரா உட்பட மேலும் சில மொட்டு கட்சி எம்.பிக்கள் இடைக்கால அரசமைக்கும் திட்டத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட் டுள்ளனர்.

இறுதியில் கருத்து வெளி யிட்ட ஜனாதிபதி,

"பிரதமரை பதவி விலகு மாறு நான் ஒருபோதும் கோர வில்லை. பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை (113) இருந்தால் எனக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. அவ்வாறு இல்லாவிட்டால் 113 ஐ நிரூபிக்கும் தரப்புக்கு பிரத மர் பதவியை வழங்கவேண்டிய நிலைமை எனக்கு ஏற்படும்." - என கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் தனக்கு பெரும்பான்மை இருப்பதாக மஹிந்த ராஜபக்ஷ இதன்போது எடுத்துரைத்துள்ளார். (அ)

# இது பொருளாதார பிரச்னைதான் இதற்கு நாம் தீர்வு வழங்குவோம்!

## மனோவிடம் கூறினார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஏப். 30

"இன்று நாட்டில் நிலவுவது பொருளாதார பிரச்னைதான். எமக்கு நட்பு நாடுகள் உதவும். பிரச்னைகளுக்கு நாம் பொரு ளாதார தீர்வு வழங்குவோம். மக்களின் பொருளாதார பிரச் னைகள் தீர்ந்து விட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்ந்து போய்விடும். அரசிய லமைப்பு தீர்வு என்பது பெரிய விடயமல்ல. அதனால் பொரு ளாதார பிரச்னைகள் தீரப்போவதில்லை. 20ஆம் திருத்தத்தை அகற்றிவிட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாக நான் சொன் னதும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதும் உண்மைதான். ஆனால், அதற்கு மேல் அதற்கு என்ன நடந்தது என எனக்கு தெரி யாது. ஒருவேளை அது அமைச்சரவை உப குழுவில் இருக்கலாம். அதுபற்றி அவசரப்பட தேவையில்லை. அது சாவகாசமாக வரும் போது வரட்டும். முதலில் மக்களின் பொருளாதார பிரச்னைகளை நான் தீர்க் கிறேன். அப்போது இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நின்று விடும்."

-இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனிடம் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இருவருக்கும் இடையில் நிகழ்ந்த தொலைபேசி உரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் தெரிவித்தவை வருமாறு:

நேற்றிரவு (வியாழன்) தொலைபேசியில் சபாநாயகர் மஹிந்த யாப்பாவிடம் பேசிவிட்டு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தொடர்பு கொண்டு, "20ஆம் திருத்தத்தை அகற்றிவிட்டு, 19ஆம் திருத் தத்தை கொண்டு வருவதாக சொன்னீர்கள். அமைச்சர வையிலும் அனுமதி பெற்ற தாகவும் சொன்னீர்கள். ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பிலும் நாம் அரசியலமைப்பு திருத்த வரைவை வழங்கியுள்ளோம். அதில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முழுமையாக அகற் றுவது பற்றி கூறப்பட்டுள்ளது.



எனினும் அரசாங்கத்தின் வரைபுக்கே முதலிடம் கிடைக் கும். 20ஆம் திருத்தத்தை அகற் றும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் ஆதரவளிப்போம். முதற்கட்டமாக, 20 ஐ அகற்றி விட்டு, 19ஐ கொண்டு வரு வதையும் நாம் ஆதரிப்போம். ஆகவே நீங்கள் எப்போது உங்கள் சட்ட வரைவை பாராளுமன்றத்துக்கு கொண்டு வருகிறீர்கள்? இது பற்றி சற்றுமுன் சபாநாயகர் மகிந்த யாப்பாவிடம் பேசினேன். உங்கள் சட்ட வரைவு எப் போது சபைக்கு வரும் என்பது பற்றி, அவர் தனக்கு எதுவுமே தெரியாது என்கிறார்", என்று கேட்டேன்.

அதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, "இன்று நாட்டில் நிலவுவது பொருளாதார பிரச்னைதான். எமக்கு நட்பு நாடுகள் உதவும். பிரச்னை களுக்கு நாம் பொருளாதார தீர்வு வழங்குவோம். அரசி யலமைப்பு தீர்வு என்பது பெரிய விடயமல்ல. அதனால் பொருளாதார பிரச்னைகள் தீரப்போவதில்லை. 20ஆம் திருத்தத்தை அகற்றி விட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாக நான் சொன்னதும், அதற்கு அமைச் சரவையில் சம்மதம் பெற்றதும் உண்மைதான். ஆனால், அதற்கு மேல் அதற்கு என்ன நடந்தது என எனக்கு தெரியாது. ஒரு வேளை அது அமைச்சரவை உபகுழுவில் இருக்கலாம். அதுபற்றி அவசரப்பட தேவை யில்லை. அது சாவகாசமாக வரும்போது வரட்டும். முதலில் மக்களின் பொருளாதார பிரச்சினைகளை நான் தீர்க்கிறேன்." என்று கூறினார்.

"அரசியலமைப்பு திருத்தம் மூலம் நாட்டில் உடனடியாக இறுதி தீர்வு வராது என்பது எனக்கு தெரியும். ஆனால் நாட் டில் ஸ்திரத்தன்மை வருமே. அது தீர்வை கொண்டு வரும். இன்று மக்கள் நாடு முழுக்க போராடுகிறார்கள். அவதிப் படுகிறார்கள். இது உங்களுக்கு பிரச்னை இல்லையா" என திருப்பி கேட்டேன்.

"இல்லை, கவலை வேண் டாம் தம்பி..! மக்களின் பொரு ளாதார பிரச்னைகள் தீர்ந்து விட்டால், இந்த ஆர்ப்பாட் டங்கள் எல்லாம் ஓய்ந்து போய் விடும். அதற்குதான் பொருளா தார பிரச்னைகளைத் தீர்க்கப் போகிறேன். அப்புறம் பாருங்கள், இந்த போராட் டங்கள் எல்லாமே முடிவுக்கு வந்து விடும்." என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறி முடித்தார்.

20ஆம் திருத்தத்தை அகற்றி விட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதா கவும், அதற்கு அமைச்சரவை யில் சம்மதம் பெற்றதாகவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சொல்லி இருந்தாலும், இதற்கு அவர் முன்னுரிமை அளிக்க வில்லை என இப்போது தெரிகி றது. நாட்டில் மக்கள் போராடு வது, உணவு, மருந்து, மின் சாரம், பெற்றோல், எரிவாயு, உரம் போன்ற பொருளாதார தேவைகளுக்காகத்தான் என அவர் உறுதியாக நம்புகிறார். ஆகவே அவற்றுக்கு தீர்வு கண்டால் இந்த போராட்டங் கள் எல்லாம் முடிவுக்கு வந்து விடும் என அவர் நம்புகிறார். இதற்காக அவருக்கு நட்பு நாடுகள் உதவும் எனவும் அவர் நம்புகிறார்.

ராஜபக்ஷ குடும்பத்தார் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல், வீணடிப்பு, தவறான நிதிக் கொள்கை போன்ற விடயங்கள் பற்றி அவர் எதுவும் கூறாவிட் டாலும்கூட, இவைபற்றிய போராட்டங்களையும் கூட அவர் முக்கியமாக கருத வில்லை என தெரிகிறது.

இதுபற்றி ஐக்கிய மக்கள் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் பேசினேன். இன்று ஏனைய எதிரணி கட்சி தலைவர்களிடமும் பேசவுள் ளேன். அனைத்து எதிரணி கட்சிகளும் தங்கள் செயல் பாடுகளை கூட்டிணைக்க வேண்டும் என விரும்புகிறேன்- என்றார். (அ)

# மின்சார கட்டணத் திருத்தம் மக்கள் கருத்தறிய தீர்மானம்

கொழும்பு, ஏப். 30

அரசாங்கத்தின் கொள் கையைப் பெற்றவுடன் மின்சா ரக் கட்டணத் திருத்தம் தொடர் பாக பொதுமக்களிடம் கருத்து கேட்கப்படவுள்ளது.

இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜனக ரத்நாயக்க இந்த விடயத் தைத் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை யினால் முன்மொழியப்பட் டுள்ள கட்டண அதிக ரிப்புக்கான திருத்தம் தொடர் பில் அரசாங்கத்தின் கொள் கையை அண்மையில் கேட்ட றிந்ததாகவும் அவர் குறிப்பிட் டார்.

நீர் மின் பற்றாக்குறையால் அதிக எரிபொருளைப் பயன் படுத்தி மின்சாரம் தயாரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் ஒரு அலகு மின்சாரத்துக்கான செலவு அதிகரித்துள்ளது.

இலங்கை மின்சார சபை ஒரு அலகு மின்சாரத்துக்கு 53 ரூபாவை செலவழித்தபோதி லும், நுகர்வோர் ஒருவருக்கு 16 ரூபாவே அறவிடப்படுகின்றது.

எவ்வாறாயினும், கடந்த 8 வருடங்களாக மின்சார கட்ட ணம் அதிகரிக்கப்படவில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

ரஜ்னீஷ் குமார்

# சீனாவுக்காக இந்தியாவை ரஷ்யா பகைத்துக்கொள்ளுமா?

மோடி அரசின் தவறான வியூகத்தால் சீனாவும் பாகிஸ்தானும் தோளோடு தோள் சேர்ந்துள்ளதாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பிப்ரவரி 2ஆம் தேதி மக்களவையில் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக, ஜம்மு - காஷ்மீர் விவகாரத்தில் பின்பற்றப் படும் தவறான உத்தியால் சீனா - பாகிஸ்தான் ஒன்றிணைந்துள்ளதாகவும், இந்திய மக்களுக்கு எதிராக அரசாங்கம் பெரிய குற்றத்தைச் செய்துள்ளதாகவும் மோடி அரசு மீது ராகுல் காந்தி குற்றம்சாட்டினார்.

யுக்ரேன் நெருக்கடி ரஷ்யாவையும் சீனாவையும் ஒன்றாக இணைத்துள்ளது என்றும் இப்போது கூறப்படுகிறது. தற்போதைய சூழலில், சீனாவும் பாகிஸ்தானும் ஒன்றிணைவது இந்தியாவுக்கு எந்த வகையிலும் நல்லதல்ல. இந்தியா இரு நாடுகளுடனும் எல்லைப் பிரச்னைகளை கொண்டுள்ளதுடன் இரு நாடுகளுடனும் இந்தியா போர்களையும் சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா பாரம்பரியமாக இந்தியாவின் நட்பு நாடாகக் கருதப்படுகிறது, ஆனால் யுக்ரேன் நெருக்கடியால் எழுந்த உலகளாவிய சூழ்நிலையில், ரஷ்யாவிற்கு சீனாவின் உறவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது.

சீனாவின் முக்கியத்துவத்தை இந்தியா குறைக்க முடியாத சூழ்நிலையில், ரஷ்யா, சீனாவுடன் நெருக்கத்தை வளர்த்துக் கொள்வது இயல்பானது.

கடந்த திங்களன்று (25.04.2022) புதுடில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருடாந்தர ஹரைசினாஹ உரையாடல் அமர்வின் தொடக்க விழாவில் உரையாற்றிய ஐரோப்பிய யூனியன் தலைவர் உர்சுலா வோன், "ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான நட்புக்கு எல்லையே இல்லை" என்று கூறினார்.

உர்சுலா இவ்வாறு கூறும்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரும் உடனிருந்தனர் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

### சீன- ரஷ்ய உறவு இந்தியாவிற்கு ஆபத்தானதா?

யுக்ரேன் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் ரஷ்யாவுக்கு எதிராக எத்தனை முறை வாக்கெடுப்புகள் நிகழ்ந்த போதும், இந்தியா வாக்களிக்கவில்லை. யுக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை இந்தியா வெளிப்படையாகக் கண்டிக்கவுமில்லை.

மேற்கத்திய நாடுகளின் அழுத்தங்களுக்கு மத்தியிலும் ரஷ்யா தொடர்பான தனது உத்தியை இந்தியா மாற்றிக்கொள்ளவில்லை. ஆனால், சீனாவும் ரஷ்யாவும் நெருங்குவதைத் தடுப்பதில் இந்திய உத்தி வெற்றி பெற்றதா? என்ற கேள்வி எழுகிறது.

"இப்போது இந்தியாவுக்கு இது மிகவும் கடினமான சூழ்நிலை. யுக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் தொடங்கியதிலிருந்து இப்போது வரை, இந்தியாவின் அறிக்கைகள் மற்றும் நிலைப்பாடுகள் மாறியுள்ளன. ஆரம்பத்தில், அனைத்து தரப்பு பாதுகாப்பு குறித்த கவலையை இந்தியா வெளியிட்டது. பின்னர் இறையாண்மை குறித்துப் பேசியது. புச்சா மீதான ரஷ்யத் தாக்குதலை இந்தியா கண்டித்தது. ஆனால், வெளிப்படையாக ரஷ்யா என்று குறிப்பிடவில்லை. இந்திய - ரஷ்ய உறவுகள் மிகவும் பாரம்பரியம் மிக்கவைதான். ஆனாலும், தற்போதைய சூழலில், சீனாவின் ஆதரவு, ரஷ்யாவுக்கு மிகவும் அவசியம். அமெரிக்காவை எதிர்க்க, சீனாவுக்கும் ரஷ்ய ஆதரவு அவசியம்" என்கிறார் ஹிந்துஸ்தான் டைம்ஸ் ஆங்கில நாளிதழின் சர்வதேச ஆசிரியர் ரெசா-உல் ஹசன் லஸ்கர்,

சீனாவுடனான ரஷ்யாவின் கூட்டு இந்தியாவுக்கு எதிராக அமையுமா என்ற கேள்விக்கு பதிலளித்த ஹசன் லஸ்கர், "இந்தியாவின் நிலைமை மிகவும் உணர்ச்சிகரமானது என்றுதான் என்னால் கூற முடியும். சமநிலைப் படுத்தும் நிலைப்பாட்டை இந்தியா கடைபிடிக்க வேண்டும்." என்றார்.

### ரஷ்யாவிற்கு அதிகரிக்கும் சீன சார்பு

சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான உறவுகள் கடந்த 30 வருடங்களாக விரிவடைந்துள்ளன. கடந்த ஆண்டு ஜூன் 28ஆம் தேதி சீன அதிபர் ஷீ ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் இடையே மெய்நிகர் உச்சி மாநாடு நடைபெற்றது.

அண்டை நாட்டு நட்புறவு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் 20வது ஆண்டு நிறைவையொட்டி இந்த உச்சி மாநாடு நடந்தது. உச்சிமாநாட்டிற்குப் பிறகு, அதிபர் புட்டின் மற்றும் ஜின்பிங் கூட்டாக அறிக்கை



வெளியிட்டனர்.

"பனிப்போர் காலத்தில் இருந்தது போல, ராணுவ மற்றும் அரசியல் கூட்டணிகள் இல்லை, ஆனால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு அதை விட அதிகமாக உள்ளது. எங்கள் உறவு சந்தர்ப்பவாதத்திற்கு அப்பாற்பட்டது, நாங்கள் ஒருவருக்கொருவர் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை" என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் காலத்தில் இருந்தே இரு நாடுகளுக்கும் இடையே எல்லைப் பிரச்னை இருந்து வந்தது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் படிப்படியாக வலுப்பெற்றுள்ளன.

### வர்த்தகம் மற்றும் பொருளாதாரம்

இரு நாடுகளின் பொருளாதாரங்களும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன. ரஷ்யா இயற்கை வளங்கள் நிறைந்தது ஆனால் அதற்கு தொழில்நுட்பம் தேவை. இந்த விஷயத்தில் சீனா ரஷ்யாவுக்கு உதவியாக உள்ளது. 2060 ஆம் ஆண்டுக்குள் தனது பொருளாதாரத்தை கார்பன் இல்லாததாக மாற்றுவோம் என்று சீனா அறிவித்துள்ளது.

தரைவழியாக ரஷ்யாவை அணுகுவதை உறுதி செய்வதில் சீனா ஈடுபட்டுள்ளது, எனவே ஐரோப்பிய சந்தையை சீனா அதிகம் சார்ந்திருப்பதை ரஷ்யா குறைக்க விரும்புகிறது. இது தவிர, இரு நாடுகளின் அரசியல் மற்றும் உள்நாட்டு அமைப்பில் ஒற்றுமை இல்லையென்றாலும், இரு நாடுகளிலும் ஆளுமையை மையமாகக் கொண்ட ஒரு ஆட்சி உள்ளது.



இரு நாடுகளும் இணைந்து ஆயுத உற்பத்தி யில் ஈடுபட்டுள்ளன. இருவருக்குமிடையிலான இராணுவப் பயிற்சிகளும் விரிவடைந் துள்ளன. மேற்கத்திய நாடு களுக்கு எதிராக இரு நாடு களும் ஒரே குரலில் பேசுகின்றன. அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் பொருளாதாரத் தடைகளால் ரஷ்யாவின் சீன சார்பு அதிகரித்துள்ளது.

### ரஷ்ய - சீன உறவு உண்மையில் வரம்பற்றதா?

அலெக்சாண்டர் காபு வேவ் சர்வதேச அமைதிக்கான கார்னகி அறக்கட்டளையின் மூத்த உறுப்பினர் ஆவார். இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் ஆழம் இருந்தாலும், அதற்கும் வரம்புகள் உள்ளன என்று கடந்த ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி இவர் எழுதினார்.

உதாரணமாக, கிரைமியா விவகாரத்தில் ரஷ்யாவை சீனா ஆதரிக்கவில்லை. சிரியா மற்றும் ஆப்ரிக்காவில் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையை சீனா ஆதரிக்கவில்லை. அதே போல், தைவான் விவகாரத்தில் ரஷ்யா தீவிரமாக சீனாவை ஆதரிக்கவில்லை. தென் சீனக் கடலில் கூட, சீனாவின் ராணுவ தளங்களை ரஷ்யா ஏற்கவில்லை.

மேலும், அலெக்சாண்டர் காபுவேவ் கூறுகையில், "பொருளாதார ரீதியாகவும் இரு நாடுகளுக்கு இடையேயான உறவுக்கு வரம்புகள் உள்ளன. வரலாற்றில் ரஷ்யாவில் சீன நிறுவனங்களால் பெரிய முதலீடு இல்லை. ரஷ்யாவிலும் முதலீட்டு சூழல் இப்படி இல்லை. இரு நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு வர்த்தகம் அதிகரித்து வருகிறது, அப்போதும் இதுதான் நிலைமை." என்று கூறுகிறார்.

### உலகளாவிய ஆயுத ஏற்றுமதி

சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நட்பு சமமாக இல்லை என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது. ரஷ்யாவின் சர்வதேச வர்த்தகத்தில் சீனாவின் பங்கு 2013 இல் 10.5 சதவீதமாக இருந்தது, இது 2021 இல் சுமார் 20 சதவீதமாக அதிகரித் துள்ளது.

வரும் நாட்களில் மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் சீனாவின் பங்கு மேலும் அதிகரிக்கும். மறுபுறம், ரஷ்யா மீது சீனாவின் பொருளாதார சார்பு மிகவும் குறைவு.

2021 ஆம் ஆண்டின் இறுதியில், சீனாவின் வர்த்தகத்தில் ரஷ்யாவின் பங்கு 2.4 சதவீதமாக மட்டுமே இருந்தது. ரஷ்யாவுக்கு சீனா அதிகம் தேவை என்றும், சீனாவுக்கு ரஷ்யாவின் தேவை குறைவு என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவிற்கும் வியட்நாமிற் கும் சீனாவுடனான உறவுகள் நன் றாக இல்லை, ஆனால் ரஷ்யாவுடனான உறவுகள் மிகவும் நன்றாக உள்ளன. சோவியத் காலத்தில் இருந்தே இந்தியா மற்றும் வியட்நாமுடன் ரஷ்யாவின் உறவுகள் நன்றாகவே உள்ளன.

### இந்தியாவின் நிலைப்பாடு

டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் மத்திய ஆசியா மற்றும் ரஷ்ய ஆய்வு மையத்தின் தலைவர் அர்ச்சனா உபாத்யாய், ரஷ்யா இந்தியாவை விட்டு சீனாவுக்கு நெருக்கமாகச் செல்ல முடியாது, இந்தியா ரஷ்யாவை விட்டு மேற்கு நாடுகளுக்கும் செல்ல முடியாது என்று கூறுகிறார்.

மேற்கத்திய நாடுகளின் கண்கள் இந்தியாவின் சந்தையின் மீது இருப்பதாக அர்ச்சனா உபாத்யாய் கூறுகிறார். "இந்தியாவின் ஆயுதத் தேவைகளில் ரஷ்யாவின் பங்கை மேற்கத்திய நாடுகள் அகற்ற விரும்புகின்றன, ஆனால் மேற்கத்திய நாடுகள் அணு ஆயுதச் சோதனைகளுக்கு தடை விதித்ததை இந்தியா மறக்காது. அமெரிக்கா பாகிஸ்தானை ஊக்குவித்து இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களை அதிகரித்தது. இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. ரஷ்யாவின் கூட்டாளித்துவம் இந்தியாவுக்கு முக்கியம். இந்தியா எந்த அழுத்தத்திலும் அதை விட்டுவிட முடியாது. ரஷ்யா இயற்கை வளங்கள் நிறைந்தது, வரவிருக்கும் நாட்களில் நமது ஆற்றல் ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கப் போகிறது." என்கிறார் அர்ச்சனா உபாத்யாய்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை இப்போது அழுத்தத்தில் இருந்து விடுபட்டுள்ளது என்றும், இதற்கு சமீபத்திய உதாரணம், இந்தியாவில் மனித உரிமைகள் குறித்து அமெரிக்காவுக்கு சில கருத்துகள் இருந்தால், இந்தியாவுக்கும் அமெரிக்காவில் மனித உரிமை மீறல் குறித்த கருத்து உண்டு என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வாஷிங்டனில் வெளிப்படையாகக் கூறியதுதான் என்கிறார் அர்ச்சனா உபாத்யாய்.

இந்தியாவின் பதில் அமெரிக்காவில் முதல் முறையாகச் சரியான மொழியில் கொடுக்கப்பட்டதாகக் கூறுகிறார். இது தவிர, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவது குறித்த விஷயத்தில், வெளியுறவுத் துறை அமைச்சர், எஸ் ஜெய்சங்கர், ரஷ்யாவிடம் இருந்து ஒரு மதிய நேரத்தில் ஐரோப்பா வாங்கும் எண்ணெயை, இந்தியா ஒரு மாதத்தில் வாங்குகிறது என்று கூறியிருந்தார்.

# சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் மேலை நாட்டவர்களின் பங்களிப்புக்கள்!

**கார்த்திக் சபேஸ்,**
(இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்



நீண்டதொரு வரலாற்றினைக் கொண்ட இந்து சமயமானது மனித வாழ்க்கைக்குத் தேவையான பன்முகப்பட்ட அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கலை, தத்துவம், அறிவியல், பொருளாதாரம், அரசியல் போன்ற பல துறைகளிலும் சிறப்புற்று விளங்கும் இந்து மதம் இந்தியாவில் தோன்றி இன்று உலக நாடுகள் பலவற்றிலும் செல்வாக்குப் பெற்றுள்ளது. உலக நாடுகள் என்ற வகையில் மேலை நாடுகளில் இந்துப்பண்பாடு செல்வாக்குப் பெறுவதற்கு மேற்குறிப்பிட்ட துறைகளில் இந்துமதம் கொண்டுள்ள மகத்துவமே காரணம்.

வரலாற்றாதாரங்களின் அடிப்படையில் பார்ப்போமானால் மேலை நாடுகளைச் சேர்ந்த மக்ஸ் முல்லர், வில்லியம் ஜோன்ஸ், எச்.எச்.வில்சன், எ.எ.மக்டோனால், ரி.எச்.க்ரிபித் போன்ற அறிஞர்களின் செயற்பாடுகள் இந்து சமயமானது பல்வேறு பரிணாமங்களை தன் வளர்ச்சிப் பாதையில் எய்துவதற்கும், இன்றைய இயந்திர உலகில் இந்துமதம் நிலைத்தது நிற்பதற்கும் காரணமாக அமைந்தன.

இந்து சமயத்தின் பரிணாம வளர்ச்சிக்கு மேலை நாட்டவர்களின் செயற்பாடுகளில் முதன்மையானதும், முக்கியமானதாகவும் கருதப்படுவது சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் மேலை நாட்டவர்களின் பங்களிப்பாகும். உலகின் பழம்பெரும் நாகரிகங்களில், இன்று வரையிலும் இந்துப் பண்பாட்டு அம்சங்களின் சாயலை வெளிக்காட்டி வரும் நாகரிகம் என்ற வகையிலே சிந்துவெளி நாகரிகம் இந்தியப்பண்பாட்டில் சிறப்பிடம் பெற்று விளங்குவதை காணலாம்.

இந்து சமயத்தின் தொன்மையினை இவ் உலகிற்குப் பறைசாற்றிய நாகரிகமாக சிந்துவெளி நாகரிகம் விளங்குகின்றது. இத்தகைய சிந்துவெளி நாகரிகமானது கி.பி 1800 காலப்பகுதியிலே கராச்சிட லாகூர் புகையிரத வீதியமைப்பின் போது வில்லியம் பிரிண்டஸ், ஜோன் பிரிண்டஸ் ஆகிய வல்லுனர்களால் வெளிக்கொணரப்பட்டது. புகையிரத வீதியமையமைப்பில் நிலத்தினை கிளர்ந்த போது மண் படைகளினால் மூடப்பட்ட நகர கட்டுமான அம்சங்கள், சுட்ட செங்கற்கள், முத்திரைகள், மனித எச்சங்கள் என்பனவும் வெளிக்கிளம்பின. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட இப் பண்டைய நாகரிகம் பற்றி பிரித்தானிய அரசாங்கத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சேர்.ஜோன்.மார்ஷல் என்பவரின் தலைமையிலே அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனடிப்படையிலே மேலைநாட்டவரான சேர்.ஜோன்.மார்ஷல் என்பவரால் மொகஞ்ச தாரோ முதலில் ஆய்வுப் பணிக்கு உட்படுத்தப்பட்டது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இவ் அகழ்வுப் பணியானது கி.பி. 1922 - 1931 வரை தொடர்ச்சியாக அகழ்வா ராட்சிக்கு உட்படுத்தப்பட்டன. இவ் அகழ்வானது ஆர்.டி. பெனர்ஜி, டி.ஆர்.சஹானி போன்ற ஆய்வாளர்களால் 1922ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் நன்கு திட்டமிடப்பட்டு அமைக் கப்பட்ட நகர கட்டுமான அமைப்பு வெளிக்கொணரப்பட்ட தோடு குளியல் தடாகங்கள், தானி யக்களஞ்சியங்கள், கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள், வழிபாட்டு முத்திரைகள் என்பனவும் வெளியாகின.

இதனைத் தொடர்ந்து மற்றுமொரு சிந்துவெளியின் பழம்பெரும்நாகரிக மான ஹரப்பா வெளிக்கொணரப்பட்டது. மேற்கு பஞ்சாப்பில் காணப்பட்ட இந் நகரானது மொத்தமாக 6 மண்மேடுகளை வெளிக காட்டியது. இங்கு தொல்லியல் துறையின் சிறப்பு மிக்க ஆராட்சியாளரான அலெக்சாண்டர் கன்னிங்காங் என்பவர் கி.பி. 1853, 1856, 1872 ஆகிய காலப் பகுதிகளிலே மூன்று முறை ஆய்வுகளை மேற்கொண்டார். இதன் பின்னர் 1921இல் தயாரம், சஹானி என்போர் ஆய்வை மேற்கொண்டனர். இதன்பின் மற்றுமொரு மேலை நாட்டவராகிய ளுசை Motimer Whelor என்பவரால் கி.பி. 1947இல் ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோவிற்கு இடைப்பட்ட ஓராயிரம் மைல் இடைவெளியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது ஈமக் காடும் இரு வேறு மண்படைகளும் வெளிப்படுத்தப் பட்டதோடு சித்திர எழுத்துக்கள் பதித்த முத்திரைகள், வளையல்கள், துணிவகைகள், மட்பாண்டங்கள், லிங்க வடிவங்கள், நகரகட்டுமான அமைப்புக்கள், சிற்பங்கள் என்பனவும் வெளிப்படுத்தப்பட்டன.

ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட இவ் அகழ்வுப்பணிகளின் மூலம் சிந்துவெளி மக்கள் சிறப்பான நகர நிர்மாணம் மேற்கொண்டிருந்ததை இங்கு கண்டெடுக்கப்பட்ட கட்டட இடிபாடுகளும் சுகாதார முறையில் காணப்பட்ட வடிகாலமைப்பு முறைகளும் எடுத்துக் காட்டுகின்றன. மேலும் ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட மத குருவின் சிற்பம், நடன மாதுவின் சிற்பங்களும் சிந்துவெளிநாகரிக மக்களின் சமய, பண்பாட்டு அம்சங்களை வெளிக்காட்டி நிற்பதை காணமுடிகிறது. இத்தகைய பண்பாட்டு நகரங்களை புலப்படுத்தியதில் மேலைநாட்டவர் வழங்கிய பங்களிப்பை காணமுடிகிறது.

இவற்றோடு மட்டுமன்றி மேலைநாட்டு தொல்லியல் ஆராட்சியாளர்களின் பங்களிப்புக்களிலே ஹரப்பா, மொகஞ்சதாரோ மட்டுமன்றி கலிபங்கன், லோத்தல், ரண்பூர், சங்குதாரோ போன்ற சிந்துவெளி பள்ளத்தாக்கில் சிறப்பு மிக்க நகரங்களை தற்கால உலகிற்கு வெளிக்காட்டியுள்ளதை காணலாம். அவ்வகையிலே வி.கே.தாபர் என்பவர் தலைமையில் கி.பி. 1960இல் மேற்கொள்ளப்பட்ட அகழ்விலே ஏராளமான சமய வழிபாட்டு பொருட்களுடன் கலிபங்கன் எனும் நகரம் வெளிக்கொணரப்பட்டது. மேலும் சபர்மதி அணையருகே கி.பி. 1955 - 1956 காலப்பகுதிகளிலே மேற்கொள்ளப் பட்ட அகழ்விலே S.R.Raw என்பவ ரால் லோத்தல் நகரம் வெளிக் கொணரப்பட்டது. இது ஒரு வணிக நகராக வெளிக்கொணரப்பட்டது.

தென்னாசியாவிற்கே உரித்தான நாகரிகம் என பெருமைப்பட வைத்த சிந்துவெளி நாகரிகத்தின் காலக் கணிப்பை மேற்கொள்வதற்கு மேலை நாட்டு ஆராட்சியாளர்கள் மேற்கொண்ட பங்களிப்பே காரணமா கும். அதாவது மேலைநாட்டவரான சேர்.ஜோன்.மார்சல் என்பவர் கி.மு. 3250 - கி.மு 2750 காலமும், மோட்டிமவீலர் என்பவர் கி.மு. 2750 - கி.மு. 1500 காலமும் சிந்துவெளி நாகரிக காலம் என கணித்து தந்துள் ளனர். இதன் பின்னரே Curban Dating மூலமாக ஊ14 முறைமை பயன்படுத் தப்பட்டு கி.மு. 2700 - கி.மு. 1850 என சிந்துவெளிகாலம் வரையறுக்கப் பட்டது.

இவற்றுக்கு மேலாக சிந்துவெளி நாகரிகம் என்ற ஒன்று தோற்றம் பெற்றதோடு அந் நாகரிகம் ஏனைய நாகரிகங்களோடும் வர்த்தக ரீதியான தொடர்புகளை கொண்டிருந்தது என்பதையும் எடுத்துக்காட்டியதில் மேலை நாட்டு அறிஞர்கள் மேற்கொண்ட ஆய்வுகளே பங்களிப்பு வழங்கியது எனலாம். அவ் வகையிலே லோத்தல் என்ற துறைமுக நகரின் கண்டுபிடிப்பின் போது அங்கே 219மீற்றர் நீளமும் 33மீற்றர் அகலமும் கொண்ட செவ்வக வடிவிலான கப்பல் துறைமுகம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு கண்டெடுக் கப்பட்ட முத்திரையானது இந் நாகரிகத் தொடர்பை பாரசீக வளைகுடாவுடன் எடுத்துக் காட்டுகிறது. மேலும் இந் நாகரிகம் சுமேரியன் நாகரிகத்துடன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளமைக்கான சான்றுகளை சமய சின்னங்கள் ஊடாக அறிய முடிகிறது. ஹரப்பாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலே விலங்குகள் சூழப்பட்ட யோக நிலையிலே காணப்படும் மூன்று தலையுடன் கூடிய தற்காலத்தில் பசுபதி வழிபாட்டுடன் தொடர்புடையதாக வெளிக்காட்டப் படும் முத்திரை கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றோடு பல தாய்த் தெய்வ வழிபாட்டை காட்டும் சுடு மண் பாவைகளும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றினைக் கொண்டு இங்கு சிறப்பான சமயம் ஒன்று இருந்தது எடுத்துக்காட்டப்படுகிறது. மூன்று தலையுடன் கூடிய இவ்வுருவமானது கி.மு.2500 - 1700 வரையான ஆண்டு களில் பரவியிருக்கலாம் என கதிரியக்க காபன் முறை யூடாக மேலை நாட்டு அறிஞர்களால் எடுத்துக் காட்டப்படுகிறது.

இவற்றுக்கு மேலாக சிந்துவெளி தொடர்பான மொழியியல் ஆய்வுக்கு மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்கள் வழங்கிய பங்களிப்பானது அளப்பெரியது. அவ்வகையில் சிந்துவெளி முத்திரையில் கண்டுபிடிக்கப்பட்ட சித்திர வடிவ எழுத்துக்களை பல அறிஞர்களும் வாசிக்க முற்பட்டனர். அதனடிப்படையிலே மைக்கல் விட்செட், இசுட்டீர் பாமர் போன்றோர் இக்கால முத்திரையிலே உள்ள குறியீடுகளை வாசிக்க முயன்று இவை மொழிக்கானவை இல்லை எனவும் அவை குடும்ப, மத, இனக் குழுக்கள் சார்ந்த குறியீடாக இருக்கலாம் என்றனர். இவர்களைத் தொடர்ந்து பேராசிரியர் பார் போலா, ஐராபதம் மகாதேவன் போன்றோரும் இந் நாகரிக எழுத்து, மொழி, இனம் தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டனர்.

படிப்படியான வளர்ச்சியினை பெற்றுக்காணப்பட்ட சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சி தொடர்பாகவும் மேலைநாட்டு அறிஞர்கள் பல ஆய்வுக்கருத்தை முன்வைத்துள்ளனர். அவ் வகையில் இந் நாகரிகமானது இரும்பு ஆயுதங்களை பயன்படுத்திய ஒரு இனக்குழுவால் அழிந்திருக்கலாம் என சேர்.ஜோன்.மார்சல் ஹரப்பா, மொகஞ்சதாரோவில் கிணறுப்படிகளிலும் மண் மேடுகளிலும் இரும்பாயுதங்களால் தாக்குண்டு காணப்பட்ட எலும்புக்கூடுகள் மூலம் எடுத்துக் காட்டுகிறார். மேலும் இங்கு ஒன்றன் மேல் ஒன்றாக படிய விடப்பட்டிருந்த 7மண்மேடு அடுக்குகளை கொண்டு வெள்ளப்பெருக்கினால் சிந்துவெளி அழிந்திருக்கலாம் என்ற சான்றும் தொல்லியல் மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது.


இவற்றை தொகுத்துப் பார்க்கும் போது சிந்துவெளி எனும் நாகரிகம் தென்னாசியாவிற்கே உரித்தான ஒரு தனித்துவமான பரந்த பிரதேசத்தைக் கொண்ட ஒரு நாகரிகமாக இருந்தமை புலனாகின்றது. இவற்றோடு அக்கால மக்களின் வாழ்க்கை கோலங்களை எடுத்துக் காட்டியதிலும் மேலைநாட்டவரின் பணிகளே போற்றக்கூடியதாக உள்ளது. இவ்வாறாக காலத்துக்கு காலம் பல ஆய்வுகள் சிந்துவெளி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருப்பினும் கூட அக்கால மக்கள் பேசிய மொழி, அவர்களின் இனம் தொடர்பாக அறிய முடியாதுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். சிந்துவெளி என்ற நாகரிகத்தையும் அதன் பண்பாட்டையும் உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டியோர் என்ற வகையில் மேலைநாட்டவர்களின் பங்களிப்பு இணையற்றது.

●



# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

08. 

கீழுள்ள முக்கோண வடிவில் பக்கமொன்றின் எண்கள் மூன்றை கூட்டும் போது 18 வரக்கூடியதாக 4, 6, 10, 12 ஆகிய எண்களினால் வெற்றுக் கூடுகளை நிரப்புக.

(1) A - 12, B - 14, C - 4, D - 8
(2) A - 10, B - 12, C - 4, D - 6
(3) A - 10, B - 12, C - 6, D - 4

- **பின்வரும் கவிதையை வாசித்து 09, 10 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**

தேசம் நமது தெய்வம் - இதைத்
தெரிந்து கொள்ளும் தம்பி
பாசம் எல்லாம் கொட்டி - அதைப்
பாதுகாக்க வேண்டும்

பாட்டன், பாட்டி வாழ்ந்த - எங்கள்
பரம்பரைகள் வாழ்ந்த
நாட்டை வணங்க வேண்டும் - அதன்
நாமம் போற்ற வேண்டும்.

09. இக்கவிதை புலப்படுத்துகின்ற பிரதான கருத்து யாது?

(1) கடவுள் பக்தி (2) நாட்டுப் பற்று (3) பரம்பரைப் பற்று


10. இக்கவிதையில் வரும் **தேசம், பாசம், நாமம்** ஆகிய சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்கள் முறையே

(1) பூமி, வாஞ்சை, திருமுகம்
(2) நாடு, விருப்பம், திலகம்
(3) நாடு, நேயம், பெயர்

11. அருகருகே அமைந்துள்ள மூன்று முழு எண்களின் கூட்டுத் தொகை 126 ஆகம். எனின் அவ் மூன்று எண்களுள் மிகப் பெரிய எண் யாது?

(1) 41 (2) 42 (3) 43

12. ஆறு பக்கங்களில் **A, B, C, D, E, F** எழுத்துக்கள் ஓர் எழுத்து என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ள தாயக்கட்டையொன்றின் மூன்று அமைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.




அவ் தாயக்கட்டையில் **D** என்ற எழுத்து குறிக்கப்பட்ட பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலே உள்ள எழுத்து எது?

(1) A (2) B (3) E

13. தரப்பட்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு தவறான விடையைத் தெரிவு செய்க.

**சுமதியின் வகுப்பில் உள்ள அனைவரும் பாட்டுப் பாடுவார்கள். அவர்களுள் பரதன் நன்றாகப் பாடும் திறமையைக் கொண்டிருந்தான்.**

(1) சுமதியை விட பரதன் நன்றாகப் பாட்டுப் பாடுவான்.
(2) பரதன் சுமதியின் வகுப்பில் கல்வி கற்கின்றான்.
(3) பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர்.

14. வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிக.

| | | | |
|---|---|---|---|
| H | G | F | E |
| P | | | M |
| I | | | L |
| A | B | C | D |

(1)


| | |
|---|---|
| N | O |
| K | J |

(2)

| | |
|---|---|
| O | N |
| J | K |

(3)

| | |
|---|---|
| N | O |
| J | K |

15. 


கடிகாரம் X முற்பகல் நேரத்தையும் கடிகாரம் Y பிற்பகல் நேரத்தையும் காட்டுகின்றது. எனின் இரு கடிகாரமும் காட்டும் நேரத்தின் வித்தியாசம் யாது?

(1) 3 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
(2) 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
(3) 12 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

## விடைகள்

| | | |
|---|---|---|
| 08. | (3) | A - 10, B - 12, C - 6, D - 4 |
| 09. | (2) | நாட்டுப் பற்று |
| 10. | (3) | நாடு, நேயம், பெயர் |
| 11. | (3) | 43 |
| 12. | (1) | A |
| 13. | (3) | பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர். |
| 14. | (2) | O N / J K |
| 15. | (2) | 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள் |

### CHANNEL-1

**30.04.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### CHANNEL - 2

**30.04.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மட்டக்களப்பு ஊடகவியலாளர்களையும் கொலை செய்யவா முயற்சிக்கின்றீர்கள்?

## பொலிஸாரிடம் வினவினார் சாணக்கியன்

மட்டக்களப்பு, ஏப். 30

**மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர்களையும் கொலை செய்யவா முயற்சிக்கின்றீர்கள் என சிவில் உடையில் ஊடக வியலாளர்களை காணொலி எடுத்த பொலிஸாரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராமின் நினைவு தினத்தினை முன் னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் நினைவேந்தல் நிகழ்வும் கவனயீர்ப்புப் போராட் டமும் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இலங்கையில் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியும் நாட்டில் இடம் பெற்றுவரும் ஊடகவியலாளர் களுக்கு எதிரான அடக்குமுறை யைக் கண்டித்தும் தமிழ் மக் களின் உரிமையை அங்கீகரிக் கக் கோரியும் இந்த போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத் தில் ஈடுபட்ட ஊடகவியலாளர் களை சிவில் உடையில் வருகை தந்திருந்த பொலிஸார் காணொளியாக பதிவு செய்தி ருந்தனர்.

இந்தநிலையில் இதன்போது கோபமடைந்த இரா.சாணக்கி யன் மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர்களையும் கொலை செய்யவா முயற்சிக் கின்றீர்கள் என கேள்வி எழுப்பி னார். (அ)



# சாய்ந்தமருதில் இப்தார் நிகழ்வு

அம்பாறை, ஏப். 30

முன்னாள் கல்முனை முதல் வர் சிராஸ் மீராசாஹிப் ஏற் பாட்டில் சாய்ந்தமருது பகுதி யில் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு மிக சிறப்பாக இடம்பெற்றது.

நேற்று முன் தினம் வியாழக் கிழமை மாலை நடந்த இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இதன்போது விசேட அதிதிகளாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஹம்மது இப்ராஹிம் முஹம் மது மன்சூர், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் தவம், முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் முழக்கம் மஜீத் உட்பட பள்ளி வாசல் நிர்வாகிகள் , மாநகர சபை உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். (அ)

# அமைச்சர் முஷாரப்பை கட்சியை விட்டு நீக்குக!

## பொத்துவில் பிரதேச உறுப்பினர்கள் வலியுறுத்து

பொத்துவில், ஏப். 30

இராஜாங்க அமைச்சு பதவி கிடைத்தால் அந்த பிரதேச மக் கள் கொண்டாடுவார்கள். ஆனால், இங்கு அந்தத் தினம் துக்க தினமாக இருக்கிறது. அரசியல் சூறாவளியில் பெரிய அரசியல் திமிங்கிலங்கள் மொட்டு கடலிலிருந்து வெளி யேறிக்கொண்டிருக்கும் இந்த காலத்தில் எங்கள் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஷாரப் பேத்தை போன்று மொட்டில் ஒட்டிக் கொண்டிருக்கிறார். அவரை இனி பொத்துவில் மக்கள் நம் பத் தயாரில்லை என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளூராட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

பொத்துவில் தனியார் விடுதி யில் வியாழக்கிழமை நடை பெற்ற விசேட ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர்க ளான ஆசிரியர் ஏ.எம்.எம். தாஜுதீன், என். எச். முனாஸ், மக்கள் காங்கிரசின் வட்டார அமைப்பாளர்களான ஏ. எல். மனாப், அலாவுதீன் அப்துல் லாஹ் ஆகியோரே இவ்வாறு தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்ட சகல பிரதேசங்களினதும் மக்களின் ஒத்துழைப்புடன் பொத்துவில் மக்களின் கணிசமான ஆதரவு டன் மண்ணின் தாகத்தை தீர்க்க உருவாக்கப்பட்ட பாராளு மன்ற உறுப்புரிமையானது இன்று வாக்களித்த மக்களுக்கு தலைகுனிவை உண்டாக்கும் விதமாக நடந்து கொள்கிறது. நாட்டினதும், நாட்டு மக்களின தும் அபிலாசைகளை மறந்து தன்னுடைய சொந்த தேவை களுக்கு முன்னுரிமையளித்து சுயநல போக்குடன் எங்கள் பிரதேச பாராளுமன்ற உறுப் பினர் எஸ். எம். எம். முஷாரப் செயல்படுகிறார்.

பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தன்னுடைய பாராளு மன்ற உறுப்பினராக பதவி வகித்த இந்த இரண்டு வருடங் களில் எமது நாட்டுக்கோ, மாவட்டத்துக்கோ அல்லது பொத்துவில் பிரதேசத்துக்கோ எந்தவித சேவைகளையும் பெறவுமில்லை. உரிமைகளை பெற்றுத்தரவுமில்லை. 2022 ஆண்டின் சிறந்த பொய் மூட் டையாகவும், வெற்றுப்போத்த லாகவுமே அவர் அரசியலில் உலா வருகிறார்.

113 ஆதரவை பெற அரசு தடுமாறிக்கொண்டிருக்கும் இந்த அரசியல் சூழ்நிலையை பயன்படுத்தி பொத்துவிலுக்கும் அவருக்கு வாக்களித்த அம் பாறை மாவட்ட மக்களுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் நிறைய விடயங்களை சாதித்திருக்க முடியும் ஆனால் அவர் சுக போகங்களை மட்டுமே பெற்றுக்கொண்டிருக்கிறார். அவரின் இராஜாங்க அமைச்சுப் பதவி மரணிக்கும் தருவாயில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது - என்றும் தெரிவித்தனர். (ஐ)

# திடீரென மாயமாகும் மோட்டார் சைக்கிள்கள்

அம்பாறை, ஏப். 30

சாய்ந்தமருது பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பகுதிகளில் மோட் டார் சைக்கிள் திருட்டு சம்ப வங்கள் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் அவதானமாக இருக்கு மாறு பொலிஸார் அறிவித்துள் ளனர்.

சாய்ந்தமருது பிரதேசத்தி லுள்ள கடற்கரையோரங்கள், தெருவோரங்கள், வீடுகள் மற் றும் கடை வாசல்கள், மைதா னங்கள், பள்ளிவாசல்கள் உள் ளிட்ட பொது இடங்களில் நிறுத்தி வைக்கப்படும் மோட் டார் சைக்கிள்கள் அடிக்கடி இனந்தெரியாத நபர்களினால் களவாடப்பட்டு வருவதாக முறைப்பாடுகள் கிடைத்து வரு வதாக சாய்ந்தமருது பொலிஸார் தெரிவித்தனர்.

இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்கள் மிக வும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் தமது மோட்டார் சைக்கிள்களை உரிய முறையில் பூட்டி பாது காப்பாக வைத்திருக்குமாறும் இத்திருட்டுச் சம்பவங்களைக் கண்டுபிடிக்கும் வகையில் பொலி ஸாருக்கு பூரண ஒத்துழைப்புக் களை வழங்குமாறும் சாய்ந்த மருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் பொதுமக்களுக்கு அறிவுறுத் தல் வழங்கப்பட்டுள்ளது. (அ)






# ஊடகவியலாளர் சிவராமின் 17ஆவது ஆண்டு நினைவு

மட்டக்களப்பு, ஏப். 30

மறைந்த சிரேஸ்ட ஊடகவியலாளர் தர்ம ரெட்ணம் - சிவராமின் (தராக்கி) 17ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் மட்டக்களப்பில் நினைவேந்தல் நிகழ்வும்,கவனயீர்ப்பு போராட் டமும் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவிய லாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையத் தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா. கிருஸ்ணகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு நகரில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூ பியில் இரு நிமிட மௌன இறைவணக்கம் செலுத்தப்பட்டு,விளக்கேற்றி,மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டதுடன் அவரின் திருவுருவப்படத்திற்கு சிரேஷ்ட ஊடகவிய லாளர்களினால் மலர்மாலை அணிவிக்கப் பட்டது.

அதனை தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு நீதிவேண்டி கவன ஈர்ப்பு போராட்டமும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரான், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந் தன் கருணாகரம்(ஜனா), இரா.சாணாக்கியன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இந்திர குமார் -பிரசன்னா, மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் எஸ். சத்தியசீலன்,முன்னாள் அரசாங்க அதிபர் மா. உதயகுமார், மதப் பெரியார்கள், மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள்,தமிழ்த் தேசிய பற்றாளர்கள், இளைஞர்கள் கலந்துகொண்டனர். (அ)

# மட்டக்களப்பில் நேற்று சர்வமத விளக்க அமர்வு

மட்டக்களப்பு, ஏப். 30

இலங்கை தேசிய சமாதனப் பேரவையின் அனுசரணையில் மட்டக்களப்பில் சர்வமத இளைஞர், யுவதிகள் பங்கேற்ற செயல்திட்ட விளக்க அமர்வு நேற்று நடைபெற்றது. இதில், பல இளைஞர், யுவதிகள் பங் கேற்றனர்.

வண்ணாத்துபூச்சி சமாதான பூங்காவின் ஏற்பாட்டில் சமா தான பூங்கா உத்தியோகத்தர்க ளின் ஒழுங்கமைப்பில் இலங்கை தேசிய சமாதனப் பேரவையின் தேசிய இணைப் பாளர் எம். உவைஸ் தலைமை யில் கல்லடி நொச்சிமுனை தனியார் விடுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த விளக்க அமர்வில் மட்டக்களப்பு பிரதேச சர்வமத இளைஞர், யுவதிகளுக்கான ஆரம்ப கட்ட விளக்க அமர் வில் காத்தான்குடி, ஆரையம் பதி, மண்முனை வடக்கு ஆகிய பிரதேசங்களின் சர்வமத தலை வர்கள், சமூக பாதுகாப்பு குழு பிரதிநிதிகள், கிராம சேவை உத்தியோகத்தர்கள்,அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)



## உக்ரைன் போரிட அமெரிக்கா 3,300 கோடி டொலர் வழங்குகிறது!

வாஷிங்டன், ஏப். 30

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு ஆதரவாக 3 ஆயிரத்து 300 கோடி டொலர் உதவிகளை அறிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்.

இராணுவ, பொருளாதார, மனிதாபிமான உதவியாக இந்த நிதி வழங்கப்படும் என்று தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி, "இது ரஷ்யாவை தாக்கவல்ல" என்று கூறியிருக்கிறார். தவிர, இந்த உதவிக்கு அமெரிக்க காங்கிரஸின் அனுமதி முக்கியமானது என்றும், இந்த நிதி உக்ரைன் தன்னை தற்காத்துக் கொள்ள உதவும் எனவும் அவர் கூறினார்.

இந்தத் திட்டத்தில் 2 ஆயிரம் கோடி டொலர் இராணுவ உதவியாகவும் 850 கோடி டொலர் பொருளாதார உதவியாகவும் 300 கோடி டொலர் மனிதாபிமான உதவியாகவும் இருக்கும் என்றும் ஜோ பைடன் தெரிவித்தார்.

இந்த உதவி குறைந்ததல்ல, ஆனால், ஆக்கிரமிப்புக்கு அனுமதித்தால் அது செலவை அதிகரிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன், இந்த உதவி ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக உக்ரைன் தன்னை தற்காத்துக் கொள்ள உதவும் எனவும் அவர் கூறினார்.

அமெரிக்கா ஏற்கனவே, உக்ரைனுக்கு உதவிகளை அளித்திருந்தாலும், இந்தத் திட்டங்கள் கணிசமானளவு உதவியை அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## ஆப்கானில் குண்டுவெடிப்புகள் 9 பேர் உயிரிழப்பு; 13 பேர் காயம்!

காபூல், ஏப். 30

வடக்கு ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் மாலை சில நிமிட இடைவெளிக்குள் அடுத்தடுத்து இடம்பெற்ற இரண்டு குண்டுவெடிப்புக்களில் 9 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன், 13 பேர் காயமடைந்தனர்.

பால்க் மாகாணத்தின் தலைநகரான மஸார்- இ-ஷெரீப்பில் இரண்டு தனித்தனி வாகனங்களை குறிவைத்து இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ரமழான் நோன்பை நிறைவு செய்வதற்காக நேற்று மாலை வீடுகளை நோக்கிச் சென்றுகொண்டிருந்தவர்களே தாக்குதலில் கொல்லப்பட்டு, காயமடைந்தனரென தலிபான் அரசின் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் முகமது ஆசிப் வசிரி தெரிவித்தார்.

ஷியா முஸ்லிம்களை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று கூறிய அவர், ஆப்கானிஸ்தானின் எதிரிகள் எங்கள் மக்களிடையே பதற்றத்தையும் பிளவையும் உருவாக்குகிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தக் குண்டுத் தாக்குதல்களுக்கு ஐ.எஸ். (ஐஎஸ்ஐஎஸ்) தீவிரவாத அமைப்பின் உள்ளூர் கிளைக் குழுவான ஐ. எஸ். ஐ. எல். (ISIL) பொறுப்பேற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானை உலுக்கிவரும் தொடர்ச்சியான கொடிய குண்டுவெடிப்புகளில் மற்றொரு சமீபத்திய தாக்குதலாக இது பதிவாகியுள்ளது.

மசார்-இ-ஷெரிப்பில் உள்ள ஷியா மசூதியில் கடந்த சில நாட்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உக்ரைன் தலைநகர் கீவில்
# ஐ. நா. பொதுச் செயலர் சந்தித்த இடமருகே ஏவுகணை தாக்குதல்!



கீவ், ஏப். 30

உக்ரைன் சென்ற ஐ. நா. பொது செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ் தலைநகர் கீவில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்றுமுன்தினம் ஆய்வு செய்து கொண்டிருந்த போது அந்தப் பகுதிக்கு அருகில் ரஷ்யா ஏவுகணை தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில் 10 பேர் காயமடைந்தனர்.

ஏப்ரல் நடுப்பகுதி முதல் தலைநகர் கீவ் அருகேயிருந்து ரஷ்யப் படைகள் வெளியேறி, தாக்குதல்களும் நிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் ஐ. நா. பொதுச் செயலாளர் வந்திருந்த வேளையில் மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தாக்குதலில் 25 மாடிகள் கொண்ட குடியிருப்பு ஒன்று சேதமடைந்தது. அதிலிருந்த 2 தளங்கள் முற்றிலுமாக சேதமடைந்தன. இதில் 10 பேர் காயமடைந்தனர் என உக்ரேனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எங்களுக்கு அருகிலேயே ஒரு தாக்குதல் நடந்தது அதிர்ச்சியைத் தந்தது. ஆனாலும் நாங்கள் அனைவரும் பத்திரமாக உள்ளோம் என ஐ. நா. ஆய்வுக் குழுவைச் சேர்ந்த ஒருவர் குறிப்பிட்டார். இந்தத் தாக்குதல் நடந்த இடத்திலிருந்து 3.5 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இடத்திலேயே ஐ. நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இணைந்து கூட்டாக பத்திரிகையாளர்களை சந்தித்தனர்.

இந்நிலையில், ஐ. நா. பொதுச் செயலாளர் வந்திருந்த வேளையில் நடந்த தாக்குதலுக்கு உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன. இது காட்டுமிராண்டித்தனம் என உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரியோ குலேபா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 21ஆம் நூற்றாண்டில் போர் என்பது முட்டாள்தனம். போர் கொடூரமானது என்று ஐ. நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ் தெரிவித்தார். போரை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியாக ஐ. நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ் ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு சென்று இரு நாடுகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார்.

செவ்வாய்க்கிழமை ரஷ்ய தலைநகர் மொஸ்கோவுக்கு சென்ற அவர், அங்கு ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்து பேச்சு நடத்தினார். அதன் தொடர்ச்சியாக வியாழக்கிழமை உக்ரைன் சென்ற அவர், அங்கு போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டதுடன், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியையும் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு முடிவடைந்து சில மணி நேரங்களில் தலைநகர் கீவில் ரஷ்யா வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாகவும் உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## போரை தடுக்க - முடிவுறுத்த பாதுகாப்பு சபை தவறிவிட்டது!

### பொதுச் செயலர் கடும் சாடல்

கீவ், ஏப். 30

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ் தனது சொந்த சபையின் பாதுகாப்பு சபையை கடுமையாக சாடியுள்ளார். அதில், உக்ரைன் போரை தடுக்கவோ அல்லது முடிவுக்கு கொண்டுவரவோ பாதுகாப்பு சபை தவறிவிட்டது என்று கூறியுள்ளார்.

ஐ. நா. பொதுச் செயலர் நேற்று முன்தினம் உக்ரைனின் தலைநகர் கீவுக்கு சென்றிருந்தார். அவர் அங்கு நின்றிருந்த சமயம் ரஷ்யா ஏவுகணை தாக்குதல்களை நடத்தியிருந்தது.

இந்நிலையில், "நான் மிகவும் தெளிவாக இருக்க விரும்புகிறேன். போரை தடுக்கவும் முடிவுக்கு கொண்டு வரவும் பாதுகாப்பு சபை தனது சக்தியில் அனைத்தையும் செய்யத் தவறிவிட்டது - என்றார். (ஐ)



புகைசூழ உணவை தயாரிக்கும் இந்தப் ஒளிப்படம் சர்வதேச உணவு ஒளிப்பட போட்டியில் முதலிடம் பிடித்தது. இந்தியாவின் ஸ்ரீநகரில் எடுக்கப்பட்ட இந்தப் படத்தை தேப்தத்தா சக்ரபோர்த்தி என்ற ஒளிப்பட கலைஞர் எடுத்துள்ளார்.

# கொங்கோவில் தட்டம்மை தாக்கம் 132 பேர் மரணம்; 6000 பேர் பாதிப்பு!

கின்சஷா, ஏப். 30

ஆபிரிக்க நாடான கொங்கோவில் தட்டம்மை நோய் வேகமாகப் பரவி வரும் நிலையில் இந்த ஆண்டு இதுவரை 132 பேர் இந்நோயால் உயிரிழந்தனர் என்று கொங்கோ சுகாதார அமைச்சர் கில்பர்ட் மொகோகி தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஆரம்பம் முதல் ஏப்ரல் 24 வரையிலான நிலவரப்படி கொங்கோ குடியரசு முழுவதும் 6,259 பேர் தட்டம்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார தலைநகரான பொய்ன்ட்-நொய்ர் தட்டம்மை தொற்று நோய் மையமாக உள்ளது. ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இதுவரை இந்தப் பகுதியில் மட்டும் மொத்தம் 5,488 பேருக்கு பாதிப்பு கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. இங்கு 112 பேர் உயிரிழந்தனர் எனவும் சுகாதார அமைச்சர் கில்பர்ட் மொகோகி தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் பலர் வைத்தியசாலைகளை தாமதமாகவே நாடினர். முன்னதாகவே வைத்தியசாலைகளை நாடியிருந்தால் பலரைக் காப்பாற்றியிருக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தட்டம்மை வேகமாகப் பரவி வரும் நிலையில் இந்த நோய் அறிகுறிகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை கொங்கோ சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது. (ஐ)



## மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் சிமோனா ஹாலேப் வெற்றி!

மட்ரிட், ஏப். 30

மட்ரிட் ஓப்பன் போட்டியின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னாள் கிராண்ட்ஸ்லாம் சம்பியன் சிமோனா ஹாலேப் 6-2, 6-3 என சீனாவின் ஸாங்கை வீழ்த்தினார்.

ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் நடைபெறும் இந்த் தொடரில் ஏனைய போட்டிகளில், பெலிண்டா பென்கிக் 6-4, 6-1 என பெகுவையும், பாவ்லோ படோஸா 6-3, 6-0 என குடெர்மெட்டோவையும், ஸிடன்ஸெக் 6-2, 6-3 என மையாவும் வென்றனர்.

சம்பியன்ஸ் லீக் தொடர்:

## அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்தது லிவர்பூல்!



லிவர்பூல், ஏப். 30

ஐரோப்பாவின் சம்பியன்ஸ் லீக் தொடரின் இரண்டாம் அரையிறுதியின் முதல் கட்ட போட்டியில் வில்லாரியல் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி லிவர்பூல் அணி தனது இறுதிச் சுற்று வாய்ப்பை தக்க வைத்துள்ளது.

ஐரோப்பிய உதைபந்தாட்ட கூட்டமைப்பு சார்பில் நடத்தப்படும் சம்பியன்ஸ் லீக் போட்டி அரையிறுதியை எட்டியுள்ளது.

முதல் அரையிறுதிப் போட்டியில் ரியல் மட்ரிட் அணியை 4-3 என மன்செஸ்டர் சிற்றி வென்றது. இந்நிலையில் இரண்டாம் அரையிறுதி முதல் கட்ட ஆட்டம் அன்பீல்டில் புதன்கிழமை இரவு நடைபெற்றது. தொடக்கம் முதலே லிவர்பூல் அணி ஆதிக்கம் செலுத்தியது. முதல் பாதியில் லிவர்பூல் வீரர் ஜோர்தான் ஹெண்டர்ஸன் அனுப்பிய பந்து வில்லா ரியல் வீரர் பெர்விஸ் காலில்பட்டு சுயகோலாக மாறியது.

பின்னர் லிவர்பூல் நட்சத்திர வீரர் முகமது சாலா தட்டிக்கொடுத்த பந்தை சாடியோ மான் அற்புதமாக இரண்டாம் கோல் அடித்தார். இதனால் 2-0 என முன்னிலை பெற்ற லிவர்பூல் ஆட்டம் முடியும் வரை வில்லாரியல் வீரர்களை கோலடிக்க விடவில்லை. முதல் பாதி ஆட்டம் முடியும் தறுவாயில் லிவர்பூல் வீரர் டியாகோ அடித்த பந்து கோல்கம்பத்தில் பட்டு வெளியேறியது.

இரண்டாம் பாதியிலும் லிவர்பூல் அணியே ஆதிக்கம் செலுத்தியது. வில்லாரியல் வீரர்களால் அதன் தற்காப்பு அரணை ஊடுருவி கோலடிக்க முடியாமல் தோல்வியைத் தழுவினர்.

# இலங்கைக்கு எதிரான ஆஸி. அணி விவரம்!

சிட்னி, ஏப். 30

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று வகைக் கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடவுள்ள அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கை வரவுள்ள அவுஸ்திரேலிய டெஸ்ட் அணிக்கு பட் கம்மின்ஸ் தலைமை தாங்குகிறார். இரு அணிகளும் மோதும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் காலியில் நடைபெறவுள்ளது.

அதேவேளை அரோன் பின்ஞ் ஒருநாள் மற்றும் இருபது - 20 அணிகளுக்கு தலைமை ஏற்கின்றார்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் பங்கேற்க தன்னைத் தயார்படுத்த வேண்டும் என்பதால் இரு பது - 20 போட்டிகளை கம்மின்ஸ் இழப்பார் என்றும், அதே நேரத்தில் அடம் சம்பா தனது முதல் குழந்தையின் பிறப்புக்காக இலங்கை தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இந்த சுற்றுப்பயணம் 2022 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய அணிக்கு மூன்று வெளிநாட்டு பயணங்களில் ஒன்றாகும், ஆஸி. அணி ஒக்ரோபரில் போர்டர் - கவாஸ்கர் தொடருக்காக இந்தியாவுக்கும் செல்லவுள்ளது.



**அணி விவரம்:**

**டெஸ்ட்:**

பட் கம்மின்ஸ் (தலைவர்), அஸ்ரன் அகர், ஸ்கொட் போலண்ட், அலெக்ஸ் கேரி, கமரூன் கிறீன், ஜோஷ் ஹசில்வூட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லாபுசாக்னே, நதன் லயன், மிட்செல் மார்ஷ், ஸ்டீவ் ஸ்மித் , மிற்சல் ஸ்ரார்க், மிட்செல் ஸ்வெப்சன், டேவிட் வோர்னர்.

ஒருநாள் அணி: அரோன் பிஞ்ச் (தலைவர்), அஸ்ரன் அகர், அலெக்ஸ் கேரி, பட் கம்மின்ஸ், கமரூன் கிறீன், ஜோஷ் ஹசில்வூட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், மார்னஸ் லாபுசாக்னே, மிற்சல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், ஸ்ரீவ் ஸ்மித், மிற்சல் ஸ்ரார்க், மார்கஸ் சிட்டோனிஸ் ஸ்வெப்சன், டேவிட் வோர்னர்

**இருபது - 20 அணி:**

அரோன் பின்ச் (தலைவர்) சீன் அபோட், அஸ்ரன் அகர், ஜோஷ் ஹசில்வூட், ஜோஷ் இங்கிலிஸ், மிற்சல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், ஜே ரிச்சர்ட்சன், கேன் ரிச்சர்ட்சன், ஸ்ரீவ் ஸ்மித், மிற்சல் ஸ்ரார்க், மார்கஸ் ஸ்ரொய்னிஸ், மட்செல் ஸ்ரொய்னிஸ், மட்செல் ஸ்வே, டேவிட் வோர்ண்.

**போட்டி விவரம்:**

ஜூன் 7: முதல் இருபதுக்கு 20, கொழும்பு

ஜூன் 8: இரண்டாவது இருபதுக்கு 20, கொழும்பு

ஜூன் 11: மூன்றாவது இருபதுக்கு 20, கண்டி

ஜூன் 14: முதல் ஒருநாள் போட்டி, கண்டி

ஜூன் 16: இரண்டாவது ஒருநாள் போட்டி, கண்டி

ஜூன் 19: மூன்றாவது ஒருநாள் போட்டி, கொழும்பு

ஜூன் 21: நான்காவது ஒருநாள் போட்டி, கொழும்பு

ஜூன் 24: ஐந்தாவது ஒருநாள் போட்டி, கொழும்பு

29 ஜூன்-ஜூலை 3: முதல் டெஸ்ட், காலி

ஜூலை 8-12: இரண்டாவது டெஸ்ட், காலி

# டில்லியிடம் வீழ்ந்தது கொல்கத்தா அணி!

மும்பை, ஏப். 30

கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்கு எதிரான ஐ. பி. எல். தொடர் 41ஆவது போட்டியில் டில்லி கப்பிட் டல்ஸ் அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான இந்தப் போட்டி நேற்று முன்தினம் இரவு மும்பையில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணி களத்தடுப் பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணியில் தொடக்க வீரர் அரோன் பின்ஞ் 3, வெங்கடேஷ் ஐயர் 6, பாபா இந்திஜித் 6, சுனில் நரைன் 0, அந்த்ரே ரஸல் 0 என வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்பினர்.

குல்தீப் யாதவின் சுழலில் அனைவரும் வந்த வேகத்திலேயே அவர்கள் நடையைக் கட்டினர்.

அணியை சரிவில் இருந்து மீட்க முயன்ற அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயரும் நீண்ட நேரம் நிலைக்காமல் 4 பௌண்ட்ரிகளுடன் 42 ஓட்டங்களை எடுத்து ஆட்ட மிழந்தார். 83 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்கள் என தடுமாறிக் கொண்டிருந்தது கொல்கத்தா.

பின்னர் நிதிஷ் ராணாவும் - ரிங்கு சிங்கும் இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்டனர். 3 பௌண்ட்ரி களுடன் 23 ஓட்டங்களுடன் ரிங்கு சிங்கும், ஓட்டம் எதையும் பெறாமல் ரிம் சௌதியும் ஆட்டமிழந்தனர். இளம் வீரர் நிதிஷ் ராணா 4 சிக்ஸர், 3 பௌண்ட்ரிகளுடன் 34 பந்துக ளில் 57 ஓட்டங்களை விளாசி முஸ்தபிஹூர் பந்தில் வெளியேறி னார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 146 ஓட்டங்களை எடுத்தது கொல்கத்தா.

டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் பந்துவீச்சில் குல்தீப் 4, முஸ்தபிஹூர் 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

147 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங் கிய டில்லி அணியில் 8 பௌண்ட்ரியுடன் டேவிட் வோர்ணர் 42 ஓட்டங்களையும், லலித் யாதவ் 22 ஓட்டங்களையும் எடுத்தனர். இருவரும் இணைந்து இரண்டாம் விக்கெட்டுக்காக 65 ஓட்டங்களை சேர்த்தனர்.

ரோவ்மேன் பவல் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரி யுடன் 16 பந்துகளில் 33 ஓட்டங்களை விளாசி தனது அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

அவருக்கு உறுதுணையாக



ஆடிய அக்ஸர் படேல் 24 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் அரங்குக்குத் திரும்பினர்.

19 ஓவர்களில் டில்லி அணி 6 விக்கெட்களை இழந்து 150 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்களால் வெற்றி கண்டது.

கொல்கத்தாவின் பந்துவீச்சில் உமேஷ் யாதவ் 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

இது டில்லி அணிக்கு நான்காவது வெற்றியாகும். கொல்கத்தாவுக்கு 6ஆவது தோல்வியாகும்.

# சர்வகட்சி அரசுக்கு இதுவே நிபந்தனை

## நாமலுக்கு ஹர்ஷ எம்.பி பதில்



கொழும்பு, ஏப். 30

அனைத்துக் கட்சிகளின் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நிபந்தனையை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வகுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால், 113 இற்கு மேல் பெரும்பான்மையுடன் ஐக்கிய மக்கள் சக்தி இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் என கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


நாட்டு மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோருகின்றனர். அவர்களின் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். தற்போது நாட்டு மக்கள் 'கோ ஹோம் கோட்டா' என்றே கூறுகின்றனர். எனவே ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் இனியும் ஆட்சி புரிவதற்கான தார்மீக நியாயத்தை இழந்துவிட்டனர்-என்றார்.

முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் ருவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்கால சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு அனைத்து பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து குறிப்பிட்ட காலத்திற்கு அரசாங்கத்தை அமைப்பதற்கு பிரதிநிதித்துவம் பெறவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மஹிந்த பதவி விலகாவிடில் மக்களுடன் போராடுவோம்!

## அத்துரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை



**கொழும்பு, ஏப். 30**

**பிரதமர் பதவிக்கு புதிய நபர் ஒருவரின் பெயர் பரிசீலிக்கப்பட்டு வருவதாக எமது மக்கள் கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் பதவி விலகவில்லை என்றால், மக்கள் போராட்டத்துடன் இணைந்து செயற்பட நேரிடும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி புதிய பிரதமர் ஒருவரை நியமிக்க தயாராகி வருவதாக அரசியல் கட்சிகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பிரதமர் மஹிந்த பதவி விலகவில்லை என்றால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் அவரை பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதமர் பதவி விலகாது விடாப்பிடியாக இருந்து நாட்டை நெருக்கடிக்குள் தள்ளமாட்டார் என நம்புகிறோம்- என்றார்.

கொழும்பு காலிமுகத் திடல் உட்பட நாடு முழுவதும் நடைபெற்று வரும் போராட்டங்களில் ஜனாதிபதி கோட்டாபய உட்பட அரசாங்கமும், முழு ராஜபக்ஷவினரும் பதவி விலகிச் செல்லவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

எனினும் ஆளும் கட்சியில் இருந்து விலகி, சுயாதீனமாக இயங்கும் விமல் வீரவன்ஸ, அத்துரலிய ரத்ன தேரர் உள்ளிட்ட தரப்பினர், பிரதமர் மஹிந்தவை பதவி விலகுமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

அத்துடன் மஹிந்தவுக்கு பதிலாக புதிய பிரதமரின் தலைமையில், இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் கோரி வருகின்றனர். (அ)

# வட மாகாணத்தில் மீன் விலை உயர்வு

கொழும்பு, ஏப். 30

எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளால் வடக்கு மாகாணத்தில் கடல் மீன்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய கடற்பரப்புகளில் நாளாந்தம் மீன்பிடித்தல் இடம்பெற்று வருகின்ற போதிலும், கடந்த சில நாட்களாக மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மீன்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்துள்ள நிலையில், கடற்தொழிலாளர்களுக்கு எரிபொருளுக்கு அதிக பணம் செலுத்த நேரிடுவதன் காரணமாக மீன்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதாக கடற்றொழில் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதிகமாக விற்பனையாகும் மீன்கள் கிலோ 2000 ரூபாவை எட்டியுள்ளதாகவும், இறால் மற்றும் நண்டு 1600 - 1800 ரூபாய்க்கு இடைப்பட்ட விலைகளில் விற்பனை செய்ய நேரிட்டுள்ளதாகவும் மீன் விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

குறித்த மீன்கள் இதற்கு முன்பு ஒரு கிலோ 700 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரையான விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ள நிலையில் இரட்டிப்பு விலை அதிகரிப்பு என்பது தாங்கிக் கொள்ள முடியாததெனவும் வடக்கு மாகாண மக்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# மக்கள் போராட்டம் நியாயமானது

கொழும்பு, ஏப். 30

மக்களின் போராட்டம் நியாயமானது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றில் தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன், ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை ஒன்றுக்காக வருகை தந்தபோது இதனைக் குறிப்பிட்டார்.

எரிவாயு, எரிபொருள் என பல்வேறு பொருட்களுக்கு தட்டுப்பாட்டு நிலை உருவாகியுள்ளது என அவர் கூறினார்.

காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நியாயமானது என அவர் சுட்டிக்காட்டினார்.

போராட்டத்தை முன்னெடுத்து வரும் இளைஞர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாக அவர் கூறினார். (அ)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் முக்கிய சத்திரசிகிச்சைகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஏப். 30

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் முதன் முதலாக வாய், மூக்கு, தாடை சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய அதிகாரி சுகந்தன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்று மேற்படி சிகிச்சைகளைப் பெற்று வந்த பொது மக்கள் இனிவரும் காலங்களில் குறித்த சிகிச்சைகளை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றி வந்த வாய், முகம், தாடை விசேட வைத்திய நிபுணர் மா. தவராஜாவினால் மேற்படி சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)



# யாழ்.வல்வை சந்திக்கு அருகில் தடம் புரண்ட கப் ரக வாகனம்!

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம் வல்வை சந்திக்கு அருகில் காப் ரக வாகனம் ஒன்று தடம் புரண்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதுவதைத் தவிர்க்கும் நோக்கில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த கப் ரக வாகனம் எதிரில் இருந்த மரத்துடன் மோதுண்டு தடம் புரண்டுள்ளது.

இந்த விபத்தில் வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் எதிரில் வந்த மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர்கள் இரண்டு கைகளையும் விட்டு சாகசம் செய்ய முற்பட்டதன் காரணமாகவே குறித்த விபத்து நிகழ்ந்ததாகவும் சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதிக்கு நிதியை குறைத்து அவரைப் பதவி விலக்கவேண்டும்

## குமார வெல்கம கோரிக்கை

கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து நிதியையும் குறைத்து அவரை பதவி விலகுமாறு வலியுறுத்த வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு கடிதம் ஒன்றின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரச தலைவராக நீடிக்கும் வரையில் அரசாங்கம் தொடர்பான எந்தவொரு விடயங்களுக்கும் தனது ஆதரவை விலக்கிக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபயவை பதவியில் இருந்து நீக்கி நாட்டையும் மக்களையும் காப்பாற்ற பாராளுமன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய 07 நடவடிக்கைகள் குறித்தும் குமார வெல்கம பரிந்துரைத்துள்ளார்.

மேலும், நம்பிக்கையில்லாப் பிரேரணை அல்லது இடைக்கால அரசாங்கம் தொடர்பான எந்தவொரு முன்மொழிவுக்கும் வாக்களிக்கப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவினால் தமக்கு அனுப்பப் பட்ட கடிதம் கிடைத்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உறுதிப்படுத்தியுள்ளார். (அ)

## அண்ணனின்...

அறியப்பட்ட பிரபல பத்திரிகையாளர் சிவராமின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சிவராம் படுகொலை செய்யப்பட்டு 17 வருடங்கள் கடந்திருக்கின்றன. இலங்கையின் இராணுவ நுணுக்கங்களை தி ஐலன்ட் பத்திரிகையில் தராகி என்ற புனைபெயரில் கட்டுரை எழுதி இலங்கையில் நடந்த இராணுவ அடக்குமுறைகளைக் கூட வெளியுலகுக்குக் கொண்டுவந்தவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதில் பாடுபட்ட ஒரு மகானை இழந்தோம்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலே 42இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இதில் 39 பேர் தமிழ் ஊடகவியலாளர்களும் இருக்கின்றனர். இந்த ஊடகவியலாளர்களுக்கு இதுவரை எந்த நீதியும் கிடைக்கவில்லை. இந்த நாட்டிலே - இந்த அரசின் காலத்தில் நீதியை நாங்கள் எதிர்பார்க்க முடியாது. மஹிந்தவின் ஆட்சியிலும் நீதியை எதிர்பார்க்க முடியாது, அவரின் தம்பி கோட்டபாயவின் ஆட்சியிலும் நாங்கள் நீதியை எதிர்பார்க்க முடியாது.

உலகத்திலே மிகவும் பிரபல்யமாக வந்த அரச தலைவராகவும், மிகவும் கீழ்த்தரமாக விமர்சிக்கப்படும் தலைவராகவும் கோட்டபாய ராஜபக்ஷ திகழ்கின்றார். இவர் ஒரு போர்க் குற்றவாளி. இவரை தமிழ் மக்கள் 2019ஆம் ஆண்டே வேண்டாமென்று நிராகரித்திருந்தார்கள். அன்று அவர் வேண்டுமென்று கொண்டு வந்தவர்களே இன்று வேண்டாம் என்று கூறுகின்றார்கள்.

எனவே, இவர் உள்ளிட்டவர்கள் பதவி விலக வேண்டும். இந்த நாடு ஒரு முன்னேற்ற நிலைக்குச் செல்ல வேண்டும். படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும் என்பதே எங்களது உறுதியான நிலைப்பாடாகும் - என்றார். (ஐ)

## இரு தினங்களுக்கு...

எனினும், திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் வழக்கம் போன்று 3 மணி 20 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சர்வகட்சி...

சார்பாக 109 எம்.பிக்கள் கலந்துக்கொண்டதைத் தொடர்ந்து, பிரதமருக்கு ஆதரவாக 117 எம்.பிக்களின் ஆதரவு இருப்பது உறுதி யாகியுள்ளதாக நம்பப்படுகிறது.

இதனையடுத்து, நேற்று இடம்பெற விருந்த சர்வகட்சிகளுடனான சந்திப்பை ஜனாதிபதி திடீரென ஒத்திவைத்துள்ளார். (அ)

## இடைக்கால...

தனோவிட்டவில் இருந்து ஆரம்பமான போராட்டம் யக்கலை வரை நடைபெற்றது. இந்தப் போராட்டத்தின் போது செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ,

"இடைக்கால அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அங்கம் வகிக்காது. அரசாங்க தரப்பினருக்குள்ளேயே முரண்பாடுகள் காணப்படுகின்றன. இதேசமயம், ஜனாதிபதி, பிரதமருக்கும் தனிப்பட்ட முரண்பாடுகள் இருக்கின்றன என்றார்.

பல குறைபாடுகளைக் கொண்ட அரசாங்கம் தற்போது இடைக்கால அரசாங்கமொன்றை அமைக்க எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் விலைக்கு வாங்க முயற்சிக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள் விற்பனைக்கு இல்லை. இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவளிக்க தவறினால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழக்க நேரிடும் என்று தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் ஆணை தமக்கு கிடைத்துள்ளதாகவும், மக்களின் ஆசியுடன் விருப்பத்துடன் பதவி விலகத் தயாராக உள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## ஜனாதிபதி...

பட்டுள்ளனர். இவர்கள் எதற்காக இங்கு அழைத்து வரப்பட்டனர் என்று தெரியவில்லை.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் அனுமதியுடனேயே இராணுவத்தினரும் பொலிஸாரும் இந்தக் கட்டடத்துக்கு அழைத்துவரப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இங்கு எந்த அடிப்படை வசதிகளும் இல்லை, கழிப்பறை வசதியோ அல்லது குளிப்பதற்குக்கூட முடியாமல் அவர்கள் அவதிப்படுகின்றனர். அனைவரும் தரையிலேயே படுத்து உறங்குகின்றனர் என்றும் அந்த இணையச் செய்தி கூறுகின்றது.

மேலும், காலிமுகத்திடலில் இளைஞர்கள் முன்னெடுத்து வரும் போராட்டம் 21ஆவது நாளை நேற்று எட்டியது. இந்நிலையில், இந்தப் போராட்டத்தில் குழப்பத்தை - அமைதியின்மையை ஏற்படுத்தும் நோக்கில் இவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இதேசமயம், கடந்த 27ஆம் திகதி ஜனாதிபதி செயலகம் முன்பாக போராட்டக்காரர்களால் அமைக்கப்பட்ட, கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் பதாகைகளை அறுத்து போராட்டத்தில் அமைதியின்மையை ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டிருந்தமையும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனினும், இந்த விடயத்திற்கும் தங்கவைக்கப்பட்டுள்ள இராணுவத்தினருக்கும் தொடர்பு இல்லை என்று கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இடைக்கால அரசுக்கு...

யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனித்து இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான பேச்சின்போது இந்த இணக்கம் எட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டை நிர்வகிக்க ஜனாதிபதி மற்றும் புதிய அமைச்சரவைக்கு உதவுவதற்காக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய தேசிய சபை ஒன்றை நியமிப்பதற்கும் ஜனாதிபதியுடனான சந்திப்பில் இணக்கம் காணப்பட்டதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீனமாக செயல்படும் 11 கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடியதையடுத்து இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இடைக்கால அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் பட்சத்தில், அது தனது தலைமையிலேயே ஸ்தாபிக்கப்பட வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தார். தன்னை பதவி நீக்க ஜனாதிபதி உடன்பட மாட்டார் என்றே நம்புகிறார் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். (ஐ)

## அடிப்படை உரிமை...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விவசாயத் துறை முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, சட்ட மா அதிபர், அரச மருத்துவர் அனுரத்த பதெனிய, அத்துரெலிய ரத்ன தேரர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி எரந்த வெலியங்கே, சட்டத்தரணி தாரக நாணயக்கார, கொட்டே கொடவிவசாயிகள் சங்கத்தின் செயலாளர் திலக் அமரதிவாகர ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். (ஐ)



# இந்திய உயர்ஸ்தானிகருடன் சுயாதீன எம்.பிக்கள் சந்திப்பு

கொழும்பு, ஏப். 30

நாட்டின் தற்போதைய பொருளாதார அரசியல் நிலை தொடர்பில் அரசாங்கததிலிருந்து சுயாதீனமாக செயல்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை சந்தித்து நேற்று முன்தினம் கலந்துரையாடினர்.

இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்புகளை இந்தியா தொடர்ச்சியாக வழங்கும் என்று உயர்ஸ்தானிகர் இதன்போது கூறினாரென இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

நெருக்கடியான நிலையில் இலங்கையுடன் தொடர்ச்சியாக கைகோத்துள்ளமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய மக்களுக்கு இதன்போது நன்றி தெரிவித்துள்ளனர்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீன குழு, முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் டிரான் அலஸ் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# இரத்தம் சேகரிக்கும் பைகள் கிடைத்தன!



கொழும்பு, ஏப். 30

தேசிய இரத்த மாற்று மையத்தில் இரத்தத்தை சேகரிக்கும் பைகளுக்கு பற்றாக்குறை நிலையில், தற்போது கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரத்த மாற்று நிலையத்திற்கு வாரத்திற்கு சுமார் 8,000 பைகள் தேவைப்படுகின்றன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமான மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மே இரண்டாவது வாரத்தில் இரத்தம் சேகரிக்கும் பைகளின் மற்றொரு கையிருப்பு கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## ஜனாதிபதிக்கு,...

கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையொப்பமிடுவதில்லை என்று கூட்டாகத் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், சுமந்திரன் சமர்ப்பிக்கும் ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை வாக்கெடுப்புக்கு வந்தால் எப்படி செயல்படுவது என்று கூட்டமைப்பு கூடித் தீர்மானிக்கும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தலைப்பிறை...

சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள், கொழும்பு மேமன் சங்க உறுப்பினர்கள் வளிமண்டலவியல் திணைக்கள உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாட்டில் எந்தப் பாகத்திலாவது தலைப்பிறை தென்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் 011 243 2110, 011 245 1245, 077 731 6415ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் சகல முஸ்லிம்களையும் கேட்டுள்ளது. (ஐ)

## ஐ.எம்.எவ்வுடன்...

கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான பெரும் பணவியல் கொள்கை கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு முன்னேற்றம் காணப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். அதன் பின்னரே இலங்கையில் வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்துவதை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனக் குழுவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மத்திய வங்கியின் ஆளுநர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். (ஐ)

## சுமந்திரன்,...

பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை கொலைகாரன், சமூக விரோதி என்று விளித்தவர்கள், சுமந்திரன், சாணக்கியன் இருக்கட் டும் அவர் கல்முனையை விட்டு வெளி யேற வேண்டும் என்றும் கோஷங்களை எழுப்பினர். இதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் இடையிலேயே நிறைவு செய்யப்பட்டது.

கல்முனை ஐக்கிய சதுக்க முன்றலில் நேற்று மதியம் 1.30 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டத்தில், முதலில் கோட்டாபய வீட்டுக்கு போ, அரசாங்கம் விலக வேண்டும் என்ற கோஷங்கள் வலியுறுத்தப்பட்டன.

எனினும், தொடர்ந்த ஆர்ப்பாட்டத்தில் கல்முனை வடக்கு பிரச்னைக்கு உடனடியாக தமிழ், முஸ்லிம் தலைமைகள் இணைந்து தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து ரவூப் ஹக்கீமுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டத்தில் குழப்பங்கள் ஏற்பட்டமையைத் தொடர்ந்து டாமஸ் சந்தியில் வைத்து போராட்டத்தை நிறைவு செய்வதாக சாணக்கியன் எம். பி. அறிவித்தார்.

இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் குறைவானவர்களே பங்கேற்றனர். கல்முனை மக்கள் அரசாங்கத்தின்மீது வெறுப்பாக இருக்கின்ற போதிலும் போராட்டத்தில் அதிகளவில் பங்கேற்காமைக்கு பேரணியை நடத்துபவர்கள் மீதான எதிர்ப்பே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu




# எரிபொருள் கேட்டால் சுடப்படும் நாட்டில் தொழிலாளர் உரிமை பாதுகாக்கப்படாது

## ஐ.தே.க. பிரதித் தலைவர் விசனம்

கொழும்பு, ஏப். 30

பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரித்து வரும் நிலையில், எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்படும் நாட்டில் தொழிலாளர்களின் உரிமைகள் ஒரு போதும் பாதுகாக்கப்படாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.



ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் வெளியேறியதும் அனைத்துப் பிரச்னைகளும் தீர்க்கப்பட்டு தற்போதைய தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி பெறும் எனவும் அதற்காக ஐக்கிய தேசியக் கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

காலிமுகத்திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக மக்கள் ஒன்று கூடி அனைத்து இலங்கையர்களின் வாழ்வுரிமைப் போராட்டத்திற்கு தீர்வைக் கோரியதாக தெரிவித்த அவர், மக்கள் வீதிக்கு இறங்கியமைக்கு காரணம் சுதந்திர காற்றை சுவாசிப்பதற்காகவே எனவும் குறிப்பிட்டார்.

எனவே, பொதுமக்களின் இந்த கோரிக்கைகளை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டுமெனவும் ருவான் விஜேவர்தன கூறினார். (அ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 - 01 - 1964



இறப்பு 26 - 04 - 2022

### பொன்னையா பாஸ்கரன்
### (Disco பாஸ்கரன்)

யாழ். கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா London ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாஸ்கரன் அவர்கள் 26.04.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா, இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், பாமினி(லண்டன்) அவர்களின் அன்புக் கணவரும், லனா, சகிரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமணிதேவி (இலங்கை), ஈஸ்வரி (இலங்கை), புஸ்பராணி (லண்டன்), மல்லிகாதேவி (லண்டன்), திருச்செல்வம் (லண்டன்), அருளானந்தம் (லண்டன்), பரபரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மார்கண்டு (இலங்கை), காலஞ்சென்ற தனபாலசிங்கம் (இலங்கை), சதாசிவம் (பிரான்ஸ்), சிவஞானறட்னம் (இலங்கை), சறோஜா (லண்டன்), தேவி (லண்டன்), ரேவதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சிவயோகநாதன் (இலங்கை), இரவிகுலநாதன் (லண்டன்), ஜெயகுலநாதன் (லண்டன்), சித்திராதேவி (இலங்கை), ராதிகா (பெல்ஜியம்), ரோகினி (லண்டன்), மதிவண்ணன் (லண்டன்), மதிவதனன் (கனடா), மதியரசன் (இலங்கை), காயத்திரி (சுவிஸ்), கௌரி, சத்தியசீலன், சசிகாந்தன் (லண்டன்), சாந்தினி (பிரான்ஸ்), வதனி, சியாமளா (டென்மார்க்), சதீஸ்மாறன் (கனடா), சர்மிளா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், தினேஷ் (லண்டன்), பிரதீப்(லண்டன்), பபிகா(லண்டன்), கோபிகா(லண்டன்), நிதுஷ்கா (லண்டன்), பிரவின் (லண்டன்), பிரீத்தி (லண்டன்), சுவேதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

*கிரியை*
Tuesday, 10 May 2022 8:00 AM - 11:00 AM
Home 53 Colwood Gardens, London SW19 2DS, UK

*தகனம்*
Tuesday, 10 May 2022 11:30 AM
North East Surrey Crematorium Cemetery Lodge, Lower Morden Ln, Morden SM4 4NU, United Kingdom

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு :
**திருச்செல்வம் (செல்வம்) - சகோதரன்**
**Mobile : +447954553488**
**அருளானந்தம் (அருள்) - சகோதரன்**
**Mobile : +447727656295**
**பராபரன்(பரா) - சகோதரன்** Mobile : +447988111694
**லதன் - மகன்** Mobile : +447534858026
**தவமணி - சகோதரி** Mobile : +94778148121
**ஈஸ்வரி - சகோதரி** Mobile : +94763914458
**ரவி ராஜி - மைத்துனி** Mobile : +94772443874

# இலங்கைக்கு சலுகைக்கடனில் பால் வழங்கவுள்ள நியூசிலாந்து

கொழும்பு, ஏப். 30

இலங்கைக்கு பால் மற்றும் விலங்கு உணவுப் பொருட்களுக்கான சலுகைக் கடன் திட்டத்தை நியூசிலாந்து வழங்க இணங்கியுள்ளதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டனுடன் நடந்த கலந்துரையாடலின்போதே இதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் மேம்பாட்டு உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்தும் இருவரும் விவாதித்தனர். (அ)

# எரிவாயு பற்றாக்குறைக்கு சில வாரங்களுக்குள் முடிவு

கொழும்பு, ஏப். 30

அடுத்த சில வாரங்களில் எரிவாயு பற்றாக்குறையை முடிவுக்கு கொண்டு வர முடியும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு அதிகபட்ச எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விநியோகித்து தற்போதுள்ள பற்றாக்குறையை நிவர்த்திக் நடவடிக்கை எடுக்கப்படும் என அதன் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன் 3,500 மெற்றிக் தொன் எரிவாயுடன் மற்றுமொரு கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது.

பெரும்பாலான எரிவாயு நுகர்வோர் நகர்ப்புறங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால், நகர்ப்புற விநியோகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் லிட்ரோ தெரிவித்துள்ளது. (அ)





# ஊடகவியலாளர் சிவராம் நினைவு தினம் யாழில்!

யாழ்ப்பாணம், ஏப். 30

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் நினைவுதினம் யாழ்.ஊடக அமையத்தில் அனுஷ்டிக் கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராமனின் 17ஆம் ஆண்டு நினைவு தினமும் , ரஜீவர்மனின் 15ஆம் ஆண்டு நினைவு தினமும் யாழ் ஊடக அமையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது சிவராம், ரஜிவர்மன் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்யப்பட்டது. (அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை மே 4 இற்கு முன்னர் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஏப். 30

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க இதனைத் தெரிவித்தார்.

தற்போது வரை குறித்த பிரேரணையில் சுமார் 125 பேர் கையெழுத்திட்டுள்ளதாகவும் அவர்குறிப்பிட்டார். இது தொடர்பாக 11 கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அரசாங்கத்திலிருந்து வெளியேறி சுயேற்சையாக இயங்கி வரும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் பேசி வருவதாகவும் அவர் கூறினார். (அ)



# சிவாராம் நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

கொழும்பு, ஏப். 30

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராக்கி சிவாராமின் 17 ஆவது நினைவு தினம் வவுனியா காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது தராக்கியின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து தீபம் ஏற்றி அஞ்சலி செய்யப்பட்டது. (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.